தமிழர் பொருளியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/= | இதழ் - 63 | 31.03.2024




# வலுவடையும் இலங்கை ரூபாய்!

பிரித்தானியரின் வருமானத்தில் பங்களிப்புச் செய்த முத்துக்கள் 08

தென்னை வெள்ளை ஈ தாக்கம் இயற்கை முறைக் கட்டுப்பாடு 18

உலகை ஏஐ மயமாக்கும் நிறுவனம் 20

# மீனவர் வாழ்வாதாரத்தை பறித்த இந்தியப் படகுகளின் ஊடுருவல்!



கடந்த சனிக்கிழமை, நள்ளிரவில், வழமைபோலவே இந்திய இழுவைப் படகுகளின் ஒரு தொகுதி நெடுந்தீவுக்கு அப்பால் உள்ள கடல் பகுதியில் நுழைந்து ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண் டிருந்தன. அந்த நேரம், வடபகுதி கடற்படைக் கட்டளைப் பீடத்தின் நான்காவது பிரிவைச் சேர்ந்த விரைவுப் படகும், இலங்கை கரையோரக் காவற்படையின் விரை வுப்படகும் அந்த இடத்துக்கு விரைந்தன.

கடற்படையின் இந்தப் படகுகள் அந்த குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று, இந்திய இழுவைப் படகுகளைத் துரத்திச் செல்ல, பெரும்பாலான இழுவைப் படகுகள் அந்த இடத்தை விட்டுச்சென்றுவிட்டன. ஆனால், கடற் படையினரின் எச்சரிக்கையும் பொருட்படுத்தாமல், இரண்டு இழுவைப் படகுகளைச் சேர்ந்த 15 மீனவர்கள் தொடர்ந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டி ருந்தனர்.

அந்த இரு இழுவைப் படகுகளிலுமிருந்து 15 மீனவர்களும் கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டு, அவர்களது இழுவைப் படகுகளுடன் காங்கேசன் துறைத் துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். பின்னர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் அவர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டு, ஜூலை 21 வரை விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வருடம், இதுவரை, 74 இந்திய மீனவர்களும், அவர்களது 12 இழுவைப் படகுகளும் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட் டதன் காரணத்தால் கைது செய்யப்பட்டி ருக்கின்றனர். 2018ம் ஆண்டு இந்த சட்டவிரோத மீன்பிடி முறை ஒரு சட்டத்திருத்தத்தினால் தடைசெய் யப்பட்டிருக்கிறது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் விமானம் மூலம் நாடுகடத்தப்பட, அவர்கள் இழுவைப் படகுகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு அரச உடமை யாக்கப்பட்டிருக்கிறது.

இரும்புக் கம்பிப் பாளங்களினாலும், பாரமான உலோகங்களாலும் செய்யப் பட்டிருக்கின்ற இயந்திரமயமாக்கப்பட்ட இந்த இழுவைப்படகுகள், வடபகுதி கடற்பகுதிக்கு நுழையும் பொழுது, அலுமினியத்தினால் செய்யப்பட்டிருக்கின்ற கடற்படைப் படகுகள் எமது நாட்டின் கடற் பகுதியிலிருந்து அவர்களை விரட்டும் போது, பிரத்தியேகக் கவனம்

எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இலங்கைக் கடற்படைப் படகுகளைக் கண்டதும், இந்திய இழுவைப் படகுகள் கூட்டம்இரண்டுமூன்று கடல்மைல்களுக்கு கலைந்து சென்றுவிடுவதால், மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்ட இந்த கடற்படைப் படகுகள் நிலைமையைச் சமாளிக்க பல சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

எங்களது கடற்பிரதேசத்தில், இந்திய மீனவர்களின் நடமாட்டத்தை நாம் அவதானிக்கும்போது, நாம் மேற்கொள்ளும் முதல் நடவடிக்கை, எங்களது படகுகளை ஒரு குறிப்பிட்ட முறையில் செலுத்தி, எமது கடற்பிரதேசத்தை விட்டுச் செல்லுமாறு அவர்களை எச்சரிக்கை செய்வோம். எமது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தொடர்ந்தும் மீன்பிடியில் ஈடுபட்டால், நாம் அவர்களைக் கைதுசெய்வோம்.

மனிதாபிமானத்தோடு தான் இந்த விடயத்தை நாங்கள் கையாள்கிறோம். எச்சரிக்கை துப்பாக்கிச் சூடு போன்ற வன்மையான நடவடிக்கைகளை நாங்கள் கையாள்வதில்லை என்று கடற்படைப் பேச்சாளரான கப்டன் கயான் விக்கிரமசூரிய தெரிவித்தார்.

"இலங்கை கடற்படையினர் நடுக்கடலில், தங்கள் இழுவைப் படகுகளைச் சேதப்படுத்தியதோடு தங்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டதாக" இந்திய மீனவர்கள் குற்றஞ்சாட்டியதாக அண்மையில் அறிக்கைகள் வெளிவந்திருந்தன. 2021 இல் ஒரு இந்திய மீனவர் அவரது இழுவைப்படகு நீரில் மூழ்கிய காரணத்தால் நீரில் மூழ்கி இறந்தார். கடற்படையினர் அந்த விடயத்தில் தாங்கள் எந்தவிதமான தவறும் இழைக்கவில்லை என்று கூறி குற்றச்சாட்டுகளை நிராகரித்திருந்தனர்.

போரினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டி ருக்கின்ற வடபகுதி மீனவர்களைப் பொறுத்தவரையில், இழுவைப் படகுகள் மூலம் மேற்கொள்ளப்படும் இந்த ஆழ்கடல் மீன்பிடி காரணமாக அவர்களது மீன்பிடி கணிசமான அளவு பாதிக்கப்பட்டிருக்கின்றது. "முன்னரைப் போல இப்போது, போதியளவு மீன் எமக்குக் கிடைப்பதில்லை. சில நாட்களில் வெறுங்கையினராக அல்லது எமது உணவுக்கு மட்டும் போதக்கூடிய மீன்பிடியுடன் நாம் கடலிலிருந்து வீடு திரும்புகிறோம்" என்று பருத்தித்துறையிலுள்ள ஆதிக கோவிலடி மீன்பிடிச் சங்கத்தின் செயலரான இராசேந்திரம் மதியழகன் தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளின் ஆழ்கடல் மீன்பிடி காரணமாக சேதமடைந்த தங்கள் மீன்பிடிவலைகள், உடைந்த உபகரணங்கள் என்பவற்றுக்கான இழப்பீட்டை வழங்கும்படி வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாகக் கோரிவருகின்றனர்.

"எமக்கு ஏற்பட்ட சேதங்களைச் சரி செய்ய இதுவரை ஒரு சதம் கூட அரசால் எமக்கு வழங்கப்படவில்லை. சமுர்த்திக் கடன் எடுத்தே எனது மீன்பிடி வலைகளை நான் வாங்கியிருந்தேன். இந்திய இழுவைப் படகுகளின் காரணமாக எனது வலைகள் கடந்த வருடம் சேதத்துக்கு உள்ளாகி யிருந்தன. இவ்விடயம் தொடர்பாகக் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு நான் தெரியப படுத்தி நட்டை ஈட்டைப் பெறுவதற்குப் பதிவு செய்திருந்தேன். ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை" என்று மதியழகன் மேலும் கவலையுடன் தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளின் ஊடுருவல்கள், சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகள் மற்றும் ஏற்றுமதியை மையமாகக் கொண்டு

அண்மைக் காலத்தில் வடபகுதியில் ஆங்காங்கே தோன்றியிருக்கும் கடலட்டைப் பண்ணைகள் போன்றவற்றின் காரணமாக, வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தங்களைப் பாதுகாக்க, அரசோ அன்றேல் தமிழ் அரசியல்வாதிகளோ இதுவரை முன்வரவில்லை என்று வடமராட்சியைச் சேர்ந்த மீனவர் தலைவர் கருத்துத் தெரிவித்தார்.

"இழுவைப் படகை உபயோகித்து மேற்கொள்ளப்படும் மீன்பிடியைச் சட்டவிரோதமாக்கிய 2018ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம், என்ன காரணத்துக்காக அமுலாக்கம் செய்யப



படவில்லை?" என்று வடமராட்சி வடக்கின் மீனவ சங்கத்தின் தலைவரான நாகராசா வர்ணகுலசிங்கம் கேள்வி எழுப்பினார். சட்ட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களை அமுல் நடத்தினால், எமது கடற் பகுதிக்கு இந்திய இழுவைப் படகுகள் வராமல் தவிர்க்க வேண்டும் என்று ஏன் நாம் இந்திய அரசிடம் கேட்க வேண்டும்? என்று அவர் வினாத்தொடுத்தார். அதேவேளை கடந்த ஆண்டுகளில் உள்நாட்டு இழுவைப்படகுகளின் எண்ணிக்கையும் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் மக்களிடையே முரண்பாடுகளையும்தோற்றுவித்திருக்கிறது என்று அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

வடமாகாணத்தைச்சேர்ந்த அமைச்சரான டக்ளஸ்தேவானந்தா இந்தப்பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்துவைக்கத் தவறிவிட்டது மட்டுமன்றி, அத்துமீறி உள்நுழைகின்ற இந்திய மீனவர்கள் மேல், தாக்குதலைத் தொடுக்க கைப்பற்றப்பட்ட இந்திய இழுவைப் படகுகளை மக்களிடம் பகிர்ந்துகப்படுத்து பிரச்சினையை இன்னும் மோசமாக்கியிருக்கிறார்.

அவ்வாறான இழுவைப் படகுகள் நான்கு, நான்கு மீனவ சங்கங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த இழுவைப்படகுகளை இயக்குவதற்குப் பெருமளவு எரிபொருளும் அதிக ஆட்பலமும் தேவைப்படுவதன் காரணத்தினால் அந்த இழுவைப்படகுகள் நான்கும் வெவ்வேறு துறைமுகங்களில் கட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு விடயங்கள் நடந்தேறிய பின்னரும், தனது இந்திய விஜயத்துக்கு முன்னதாக இந்த விடயம் பற்றி தமிழ்நாட்டு முதல் அமைச்சரிடம் பேசும்படி, தமிழ் அரசியல்வாதிகளிடம் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். நாங்கள் வீதிக்கு வந்து போராடும் வரை, எங்களது நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயம் பற்றி மௌனமாகவே இருந்திருக்கிறார்கள் என்று வர்ணகுலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

"இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இலங்கைக் கடலில் மீன் பிடிப்பதற்கான உரிமத்தை இந்திய மீனவர்களுக்கு வழங்கலாம்" என்ற ஒரு ஆலோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான முன்மொழிவுகளை நடைமுறைப் படுத்த வடபகுதி மீனவர்கள்ஒருபோதும்அனுமதிக்க மாட்டார்கள். 'ஆழ்கடல் மீன்பிடி முறைக்குப் பதிலாக வேறு விதமான மீன்பிடி முறைகளைக் கையாளலாம்' என்று, அமைச்சர்கள் மட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையே 2016 இல் எட்டப்பட்ட முடிவு ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் உண்மையில் விரும்பியிருந்தால், மாற்று மீன்பிடி முறைகளை விரைவாக அவர்கள் அமுலுக்குக்கொண்டுவந்திருக்க வேண்டும். அந்தச் சந்திப்பில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்களான, ஒவ்வொரு ஆறு மாதமும் மீனவர்கள் மட்டத்தினாலான கலந்துரையாடல்கள், இரு நாட்டுக் கடற்படைகளும் இணைந்து ரோந்து செய்தல் போன்றவை ஒருபோதுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று ஊர்காவற்றுறை மீனவ சங்கத் தலைவரும், யாழ்ப்பாண மீனவக்கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றியத்தின் மேனாள் தலைவருமான, அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே முன்னர் நடைபெற்ற கலந்துரையாடல்களில் அன்னலிங்கம் அன்னராசா பங்குபற்றியிருந்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான ஒரு உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொள்ளவுள்ள சூழலில், வடமாகாணத் திலுள்ள 50,000 மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துமாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இருநாடுகளுக்கும் இடையே அமைச்சர் மட்டக்கலந்துரையாடல்கள்நடைபெறுவதற்கு முன்னதாக, 2014ம் ஆண்டிலிருந்து, மீனவர் மட்டக் கலந்துரையாடல்களில் நாங்கள் பங்கு பற்றியிருந்தோம். அக்கலந்துரையாடலில், ஆழ்கடல் மீன்பிடியைத் தாங்கள் கைவிடுவதாகவும், அதற்குப்பதிலாக வேறு மீன்பிடி முறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கென ஒரு இரண்டு வருட கால அவகாசத்தை தமக்குத் தரும்படி அவர்கள் கேட்டிருந்தனர். ஆனால் அப்படியான எதுவும் நடைபெறவில்லை. தொடர்ந்தும் அவர்கள் ஆழ்கடல் மீன்பிடியிலே தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று அன்னராசா மேலும் தெரிவித்தார்.

மீன்பிடி தொடர்பாக இந்திய – இலங்கை இணைந்த செயற்குழு கடைசியாக இணைய வழியாக கடந்த வருடம் மார்ச் மாதம் 25ம்திகதி சந்தித்தது. இக்கலந்துரையாடலில், இந்திய மீனவர்களால் மேற்கொள்ளப்படும் மீன்பிடி முறைகள் தொடர்பாக இலங்கைத் தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டதுடன் வடபகுதி மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துவிடாதிருக்க இருநாடுகளும்இணைந்து செயற்றிறன்மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரப்பட்டது.

இந்தியாவின் பாண்டிச்சேரி, காரைக்கால், இராமேஸ்வரம், நாகபட்டினம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த ஆகக்குறைந்தது 5000 ஆழ்கடல் இழுவைப்படகுகள், வாரம் முழுவதும் எமது கடற்பகுதிக்கு வந்து, ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதாகவும், எமது மீனவர்களின் வாழ்வாதாரம் இதனால் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இந்திய – இலங்கை மீன்பிடிப் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டிருந்தார்.

1976ம் ஆண்டில் இருநாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்ட பின்னர், முன்னர் 36 அடி நீளத்தையும் 120 குதிரை வலுகொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களையும் கொண்ட இழுவைப் படகுகள் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர், 50-60 நீளமாகவும் 350- 550 குதிரை வலுக்கொண்ட இயந்திரங்களைக் கொண்டதாகவும் மாற்றமடைந்தன என்று குறிப்பிட்ட டக்ளஸ், இப்பிரச்சினையின் காத்திரமான தன்மையைச் சுட்டிக் காட்டினார்.

கடல் சட்டத்தின் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் பிரகாரம், இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார வலயத்தினூடாக அரேபியக் கடலுக்குள் பிரவேசிப்பதற்கு இலங்கை மீனவர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் நரேந்திர மோடியுடன் உரையாட இருக்கிறார் என்றும் அறியக்கூடியதாகவிருக்கிறது.

**சன்டே ரைம்ஸ்**

தமிழர் பொருணமியம்
வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
31.03.2024

# வங்கி வட்டி வீதங்கள் குறைவால் மாற்று முதலீட்டை நாடும் மக்கள்



வங்கிகளில் நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்கள் கடந்த ஆண்டில் காணப்பட்ட இரட்டை இலக்கப் பெறுமதிகளிலிருந்து ஒற்றை இலக்கப் பெறுமதிகளுக்கு வீழ்ச்சி கண்டுள்ளன. இந்நிலையில், மக்கள் தம் கொண்டுள்ள நிதியை நிலையான வைப்புகளிலிருந்து மீளப் பெற்று மாற்று முதலீட்டுத் திட்டங்களில் வைப்புச் செய்வதற்கு தூண்டப்படுகின்றனர்.

இலங்கை மத்திய வங்கியினால் நாணயக் கொள்கைகள் மீளாய்வு செய்யப்படும் நிலையில், அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளின் போது, வைப்புகளுக்கான மற்றும் கடன் வழங்கலுக்கான வட்டி வீதங்களை தொடர்ந்தும் குறைப்பது பற்றி தீர்மானித்து அறிவித்திருந்தது.

இவ்வாறம் வெளியிடப்பட்ட தீர்மானத்தின் போதும், இந்த இரு வட்டி வீதங்களும் முறையே 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைத்துள்ளது. அதன் பிரகாரம் வைப்பு வீதம் 8.50 சதவீதமாக மத்திய வங்கி பரிந்துரைத்துள்ளது.

இதனால் வங்கிகளில் நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்கள் கடந்த ஆண்டில் காணப்பட்ட இரட்டை இலக்கப் பெறுமதிகளிலிருந்து ஒற்றை இலக்கப் பெறுமதிகளுக்கு வீழ்ச்சி கண்டுள்ளன. இந்நிலையில், மக்கள் தம் கொண்டுள்ள நிதியை நிலையான வைப்புகளிலிருந்து மீளப் பெற்று மாற்று முதலீட்டுத் திட்டங்களில் வைப்புச் செய்வதற்கு தூண்டப்படுகின்றனர்.

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை தரவுகளின் பிரகாரம் நாட்டில் பணவீக்கத்தை 5 சதவீதமாக பேணும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்படுவதாகவும், தெரிவிக்கப்படுகின்ற போதிலும், வங்கிகளில் கடன்களுக்கான வட்டி வீதங்கள் தொடர்ந்தும் உயர்வாகவே காணப்படுகின்றன.

குறிப்பாக தனிநபர் கடன்களை எடுத்துக் கொண்டால் 14-17 சதவீதம் வரையில் வங்கிகளில் வழங்கப்படுகின்றன. சில வங்கிசாரா நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் 35- 40 சதவீதம் வரையிலும் கடன் வசதி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சந்தையில் ஒழுங்குபடுத்தல் சீராக கண்காணிக்கப்படாத ஒரு சூழலில், புதிதாக பல முதலீட்டுத் திட்டங்கள் முளைவிட்டுள்ளன. சாதாரணமாக, இலங்கையில் நிலவும் பொருளாதாரச் சூழலில் இவ்வாறான அனுமதி பெறாத, பதிவு செய்யப்படாத கவர்ச்சிகரமான அனுகூலங்களை வழங்கும் வாக்குறுதிகளுடன் மக்களை ஏமாற்றி அவர்களின் பணத்தை கொண்டு செல்லும் திட்டங்கள் தோன்றுவது வழமை.

இவை தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டியது முக்கியமானதாகும். இரண்டு வருட காலப்பகுதியில் இலங்கை ரூபாயின் மதிப்பு சுமார் இரு மடங்கு வீழ்ச்சியை பதிவு செய்துள்ள நிலையில், பொது மக்களும் தாம் உழைத்த பணத்துக்கு உயர்ந்த பலனை பெற்றுக்கொள்ளவே எதிர்பார்க்கின்றனர். மாறாக, வங்கிக் கட்டமைப்புகளில் அவர்கள் மேற்கொள்ளும் வைப்புகளுக்கு கிடைக்கும் வட்டியின் மீது வரி அறவிடப்படுவதாலும் அவர்களின் முதல் மீதான உழைப்பு வீழ்ச்சியடைகின்றது.

இந்நிலையில், மரச் செய்கைகளில் முதலீடு, ஆட்களை சேர்க்கும் பிரமிட் திட்டங்கள் போன்றவற்றில் மக்கள் தமது அறியாமையினால் நாட்டம் கொள்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில், மக்களின் வைப்புகளையும், முதலீடுகளையும் கவர்வதற்கு அனுமதியளிக்கப்பட்ட, அங்கிகாரம் பெற்ற நிறுவனங்கள் முறையான திட்டங்களை வழங்க வேண்டியது பொருத்தமானதாக அமைந்திருக்கும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## வரவும் செலவும்

வரவு எட்டணா! செலவு பத்தனா என்ற நிலையில்தான் இருக்கின்றது இலங்கை மக்களின் நிலை. இதனால், மக்கள் கடன் பெற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அல்லது தமது அத்தியவசிய தேவைகள் பலவற்றைக்கூட தியாகம் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். குறிப்பாக பல பெற்றோர் தமது ஒரு நேர உணவைத் தியாகம் செய்து பிள்ளைகளுக்கு உணவூட்டுகிறார்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலத்தில் தனிநபர் ஒருவரின் மாதாந்த செலவு அதிகரித்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவ்வருடம் ஜனவரி மாதத்தில் ஒருவருக்கு தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச மாதாந்தச் செலவு சராசரியாக 17,014 ரூபாயாக அதிகரித்துள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஆண்டு டிசெம்பரில் இதன் மதிப்பு 16,524 ஆக பதிவானது.

இதில் இரண்டு விடயங்கள் அவதானத்துக்குரியவை. இது ஒருவருக்கான செலவு. அத்துடன் அடிப்படைச் செலவுகள் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளன. ஐந்து பேருள்ள குடும்பம் ஒன்றுக்கு அடிப்படைச் செலவுகளுடன் ஏனைய செலவுளையும் சேர்த்தால் ஒன்றரை இலட்சம் வரையில் தேவைப்படும். ஆனால், குடும்பம் ஒன்றின் சராசரி வருமானம் எந்தவகையிலும், இதற்குப் போதுமானதாக இல்லை. இதனால், பாடசாலைப் படிப்பை இடைநிறுத்திய மாணவர்கள் பலர் உள்ளார்கள்.

ஒரு நபரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மாவட்ட மட்டத்தில் மாதாந்தச் செலவு கணக்கிடப்பட்டுள்ளதாகவும், கொழும்பு மாவட்டத்தில் வாழும் மக்களே அதிக செலவினங்களைச் சுமக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் தனிநபர் மாதாந்தச் செலவு 18,350 ரூபாயாகவும், கம்பஹா மாவட்டத்தில் 18,256 ரூபாயாகவும், நுவரெலியா மாவட்டத்தில் 17,892 ரூபாயாகவும் உள்ளது.

சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கையின்படி, மொனராகலை மாவட்டத்திலிருந்து மிகக் குறைந்த தனிநபர் செலவீனம் பதிவாகியுள்ளதுடன் அது 16,268 ஆகும்.

வடக்கு – கிழக்கு மலையகப் பகுதிகளிலும் தனிநபர் செலவீனம் மிக அதிகமாக இருக்கும் அதேவேளையில், அவர்களுடைய வருமானம் மிகவும் குறைவாகவே உள்ளது. இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தனியாக ஆய்வு செய்யப்படவேண்டியவை. குறிப்பாக, ஊட்டச்சத்து குறைபாடு, மாணவர்கள் இடை விலகுவது, சமூக சீர்கேடுகள் போன்றன தீவிரமாக அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் அரசாங்கம் போதிய சமூக பாதுகாப்புத் திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவது அவசியம்.

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
31.03.2024




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,71,500 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,87,000 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** ரூபாவின் மதிப்பு உயர்வடைந்துவருவதாகவும், பொருளாதாரம் ஸ்திரமடைந்து வருவதாகவும் சொல்லப்படுகின்றது. இதன் பலன் மக்களுக்குக் கிடைக்கமலிருப்பது ஏன்? கிடைக்குமா?

**எம்.கணேசமூர்த்தி**
**கொழும்பு 15**

**பதில் -** உண்மைதான். ரூபாவின் மதிப்பு அண்மைக்காலத்தில் அதிகரித்து வருவது வெளிப்படை.

இலங்கையில் நுகர்வோர் பொருட்கள், இடைப்பாவனை பொருட்கள் மற்றும் மூலதன பொருட்கள் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் இல்லை. ஆனால், டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு உயர்ந்திருந்த போதிலும், இறக்குமதி செய்யப்படும் நுகர்வோர் பொருட்களில் இதுவரையில் விலைக் குறைப்பு ஏற்படுத்தப்படவில்லை. பால்மா விலையில் மாத்திரம் விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறிப்பாக, நாட்டில் பொது மக்களின் வாழ்க்கைச் செலவில் பிரதான தாக்கம் செலுத்தும் காரணியான எரிபொருள் விலைகள் குறைக்கப்படவில்லை. சர்வதேச சந்தையில் கடந்த மாதம் நிலவிய எரிபொருள் விலை உயர்வுகள் மற்றும்ஜனவரிமாதம்முதல்எரிபொருள்கள் மீது பெறுமதி சேர் வரி பிரயோகிக்கப்பட்டுள்ளமை போன்றன இத்தத் தீர்மானத்தில் தாக்கம் செலுத்தியிருக்கலாம்.

நாட்டின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அதிகரிக்கப்படுவதுடன் ரூபாயின் மதிப்பு உயர்வடைந்தால், அது இயற்கையானது. தற்போதைய நிலை மிகவும் தற்காலிகமானதாகும். எதிர்காலத்தில் இறக்குமதிகள் கட்டுப்பாடுகள் மேலும் தளர்க்கப்பட்டதும், பெற்ற கடன்களை மீளச் செலுத்த ஆரம்பித்ததும், இந்த நிலை மாறும். ரூபாய்க்கு நிகரான டொலரின் பெறுமதி அதிகரிக்கும்.

தற்போதைய பொருளாதார மீட்சி என்பது வெறும் மாயக் கதை, விரைவில் நாம் மீண்டும் பின்நோக்கி செல்வோம் என்றவாறான கருத்துகள் பகிரப்படுகின்றன. முறையாக பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றப்படாவிடின், நாட்டின் பின்நோக்கிய நகர்வை தடுக்க முடியாது என்பதுதான் உண்மை.

நாட்டினுள் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதுடன், அது சார்ந்த வருமானம் அதிகரித்துள்ளது மற்றும் வெளிநாடுகளில் பணியாற்றுவோர் அனுப்பும் பணத்தொகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. குறுகிய கால அடிப்படையில் இந்த இரு துறைகளினூடாகவும் நாட்டினுள் அந்நியச் செலாவணி அதிகமாக வருகின்றது. இதனால்தான் ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது.

இதன் பலன் மக்களை இன்னும் முழுமையாகச் சென்றடையவில்லை. ஆனால், தேர்தல்கள் வரவுள்ளதாக மேலும் சில விலைக் குறைப்புக்களை நாட்டு மக்கள் எதிர்பார்க்கலாம்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -

tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 160/= |
| உருளைக்கிழங்கு | 200/= |
| பச்சை மிளகாய் | 200/= |
| தக்காளி | 80/= |
| மரவள்ளிக்கிழங்கு | 120/= |
| கோவா | 250/= |
| கரட் | 300/= |
| வாழைக்காய் | 130/= |
| சின்ன வெங்காயம் | 250/= |
| பாகற்காய் | 300/= |
| வெண்டக்காய் | 250/= |
| பயற்றங்காய் | 200/= |
| பீற்றூட் | 250/= |
| முருங்கக்காய் | 1000/= |
| தேங்காய் | 120/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 191/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 318/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 217/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 371/= |
| சுவிஸ் பிராங் - | 324/= |
| அமெரிக்க டொலர் - | 295/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 226/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 332/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 228/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 387/= |
| சுவிஸ் பிராங் - | 340/= |
| அமெரிக்க டொலர் - | 305/= |

# எங்கட ஆச்சி


- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -



**இனி உந்த மாட்டுப் பாலை உறை போடுறதால தாராளமா தயிர் மோர் கிடைக்கும். தயிரைக் கடையிறதால நெய் வரும். உதால வீட்டில பசி பஞ்சம் பட்டினி எண்ட ஒண்டு கடைசிவரையும் எட்டிப்பாக்காது.**

முந்தி எங்கட ஊரில அநேகமாக எல்லா வீடுகளிலையும் மாடாடுகள் நிக்கும்.

அவை அவையின்ரை வசதி வாய்ப்புக்கு ஏத்த மாதிரி ஒண்டில இருந்து பலதுமாக பட்டியாகவும் நிக்கும். உதுகள் நிக்கிறதுக்கெண்டு சிலர் கொட்டில்கள் போட்டிருப்பினம் .

சிலர் மரங்களுக்கு கீழை கட்டுவினம், சிலர் முத்தத்தில கட்டை அடிச்சு இல்லாட்டில் கம்பி அடிச்சு உதுகளைக் கட்டுவினம். உந்தக் கொட்டில்கள் பனை ஓலை இல்லாட்டில் கிடுகுக் கொட்டில்களாக இருக்கும்.

பேந்து உதுகள் ஓட்டுக்கொட்டில்களாகவும் தகரக்கொட்டில்களாகவும் ஏன் அஸ்பெஸ்ரஸ் சீற்றுக் கொட்டில்களாகவும் மாறினதுகள். உப்பிடி மாடாடு வளத்ததால சனத்துக்கு பல விதத்திலையும் லாபமாத்தான் இருந்தது. வயலுக்கு கொட்டுறதுக்கு தாராளமா ஆட்டுப் புழுக்கை சாணி கிடைக்கும். வீட்டுத் தேவைக்கு எந்த நேரமும் ஆட்டுப்பால் மாட்டுப்பால் கிடைக்கும்.

இனி உந்த மாட்டுப் பாலை உறை போடுறதால தாராளமா தயிர் மோர் கிடைக்கும். தயிரைக் கடையிறதால நெய் வரும். உதால வீட்டில பசி பஞ்சம் பட்டினி எண்ட ஒண்டு கடைசிவரையும் எட்டிப்பாக்காது.

சாணி ஆட்டுப்புளுக்கை மட்டும் போட்டு கண்ட கிண்ட உரங்களையும் போடாம விடுகிறதால எங்கட வயல்களில விளையிற நெல்லில நஞ்சூறிக் கிடக்காது. ஒரு மூண்டு பசு மாடு ஒரு வீட்டில நிக்கும் எண்டால் வரியம் முழுக்கப்பால் கிடைக்கும். எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறவ மாப்பால் குடிச்சு வளருற பெடி பெட்டையளுக்கு மூளை மாந்திப்போடும்.

ஆனால் ஆட்டுப்பால் மாட்டுப்பால் குடிச்சு வளருற பிள்ளையள் நல்ல தைரியசாலியளாகவும் புத்திசாலியளாகவும் இருப்பினம் எண்டுவா. எங்கட ஆக்கள் கனபேர் பால்வித்தே தங்கட சீவியத்தை கொண்டுநடத்தினவை. பெடிபெட்டையளைப் படிப்பிச்சவை. சீதன பாதனத்தை குடுத்து குமர்களை எல்லாம் கரை சேத்தவை. மாடாட்டை மனுசரைப்பாக்குமாப்போலதான் பாத்து வளத்தவை.

ஒவ்வொரு மாட்டுக்கும் ஆட்டுக்கும் ஒவ்வொரு பெயர் இருக்கும்.

ஆனால் இப்ப எங்கட ஆக்கள் மாடாடு வளத்தால் தங்கடசீவியத்துக்கு நல்லது தங்கட குடும்பப் பொருளாதாரத்துக்கு நல்லது தங்கடை நாட்டுப்பொருளாதாரத்துக்கு நல்லது எண்டதைப்பற்றி யோசிக்கிறது கிடையாது . உப்பிடி மாடாடு வளத்தால் ஆரிட்டையும் கை ஏந்த வேண்டிய தேவை இருக்காது எண்டதைப்பற்றியும் யோசிக்கிறது கிடையாது .

கனபேர் இப்ப மாடாடு வளக்க வெளிக்கிட்டு அதுகளை மேச்சுத் தண்ணி காட்டித் தீன் போட்டு கஸ்ரப்படுகிறதை விட ஆரிட்டையும் பல்லை இளிச்சு கை ஏந்திச் சீவிக்கிறது சுகம் எண்டு நெக்கினம். முந்தி எங்கட ஊரிலை கடைக்காரர் தெருக்காரர் உத்தியோகம் கித்தியோகம் பாக்கிறவை எண்டுஅநேகமா எல்லாற்றை வீட்டிலையும் மாடாடுகள் நிக்கும் .

வேலை வெட்டிக்குப் போக முந்தி அதுகளின்ரை வேலையளை முடிச்சுப் போட்டுத்தான் அவை போவினம் . அதுகளையும் தங்களைப் போல மனிசரைபோலத்தான் பாவிச்சு வளத்தவை. உப்பிடி வளத்த படியாலை அவைக்கு ஒரு உபரி வருமானம் வந்த படியாலை வலு சிக்காராச் சீவிச்சவை எண்டுவார் அப்பு .

உண்ணான எல்லாருக்கும் மாடாடு வளக்க விருப்பம்இருந்தாலும்வளக்கிறதுக்க வசதி வாய்ப்புகள் இருக்காது . சில நேரம் ஆரும் வளக்க வெளிக்கிட்டாலும் அயலட்டையில உள்ளவை அதை இதைச் சொல்லி அவையை வளக்க விடாமல் பண்ணிப் போடுவினம் .

உப்பிடி மாடாடு வளக்க வசதி இல்லாட்டில் பரவாயில்லை ஆனால் மாடாடு கட்டி வளக்க மேய விட இடம் இருக்கிற அதுகளுக்கு வைக்கிறதுக்கு தண்ணிக்குத் தீனுக்கு பிரச்சினை இல்லாத ஆக்களும் தங்கட சோம்பேறித்தனத்தாலை உதுகளைச் செய்யப் பின் நிக்கினம் எண்டது சரியான கவலையான விஷயம் எண்டுவார் எங்கட அப்பு .

ஆனால் வளக்கிற சிலரும் தங்கடை மாடாடுகளை ஊரிலை மேயவிட்டு சனங்களுக்கு உபத்திரவம் குடுப்பினம் .அதுகும் விதைப்புக் காலத்திலையும் அறுவடை காலத்திலையும் வயல்களுக்கை தோட்டங்களுக்கை மாடாடுகளை அவிட்டு விட்டும் அழிச்சாட்டியம் பண்ணுவினம் .

இன்னும் சிலர் இருக்கினம் மாடாடு வளத்தால் எங்கட சீவியம் போடும் அதுக்கு உதவி செய்யுங்கோ எண்டு காசு உதவி செய்யிறவையிட்டை காசு கேட்டு வாங்கிப்போட்டு மாட்டாது வாங்காமல் தங்கடை சோலியளைப் பாப்பினம் . இன்னும் சிலர் ஆரும் உதவி எண்டு குடுக்கிற மாடாடுகளை அவை அங்காலை போறதுக்கு இடையில இஞ்சாலை வித்துப்போட்டு தங்கடை சோலி சுறட்டுகளைப் பாப்பினம் .உதாலையே இண்டைக்கு கஷ்டப்படுகிற ஆக்களுக்கு உதவி செய்ய வேணும் எண்டு நெக்கிறவையும் உதவி செய்யப் பின்னடிக்கினம் எண்டுவார் எங்கட குஞ்சப்பு .

# வரி விளம்பரம்




# classified advertisement

## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

## SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |


தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## மன்னாருக்குப் பெருமை சேர்க்கும் முத்துக்குளிப்பு - 02

# பிரித்தானியரின் வருமானத்தில் பங்களிப்புச் செய்த முத்துக்கள்



**நிஷாந்தி பிரபாகரன்**

> **“இலங்கையின் முத்துக்குளிப்புப் பகுதி இலங்கைத் தீவின் வட மேற்கில் உள்ள நீர்கொழும்பு முதல் மன்னார் வரையிலான கரையோரப் பகுதியை அண்டிய மன்னார்க் குடாப் பகுதியாகும். இப்பகுதி நீண்ட காலமாகத் தமிழ் அரசான யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது”**

வெனிசிய அறிஞர் மார்க்கோ)போலோ சொல்கிறார் 14ம் நூற்றாண்டில் மலையாளக் கரையில் உள்ள யூர்பட்டினம் சிறந்து விளங்கியது. இங்கு அதிகமாக மன்னார் முத்துக்கள் விற்கப்பட்டுள்ளதாக இவர் கூறியுள்ளார். 1294ஆம் ஆண்டு மார்க்கோ போலோ மன்னார் வளைகுடாவுக்கும் வந்துள்ளதுடன், அறுவடைக்காலத்தில் அங்கு கிட்டத்தட்ட 500 கப்பல்களும் படகுகளும் சுழியோடிகள் மற்றும் வர்த்தகர்களுடன் முத்துக்களைத் தேடி வந்திருந்தாக குறிப்புக்கள் கூறுகின்றன.

மொறோக்கோ யாத்திரிகர் இபுனு பதூதா, தான் இலங்கையில் கரை இறங்கிய போது ஆரியச்சக்கரவர்த்தியின் கட்டுப்பாட்டில் இருந்த முத்துச் சலாபத்திற்கு அண்மையில் உள்ள ‘பட்டாள’ நகரில் மரத்தால் செய்யப்பட்ட அடுக்கு மாளிகையில் தான் தங்கியதாகவும், அண்மையில் முத்துக்கள் குவிக்கப்பட்டிருந்ததையும் அதை அதிகாரிகள் தரம்




12 Tamil divers fishing for pearls off the coast of Ceylon (c. 1925–29)

பிரித்ததையும், கண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் முத்துக்குளிப்புப் பகுதி இலங்கைத் தீவின் வட மேற்கில் உள்ள நீர்கொழும்பு முதல் மன்னார் வரையிலான கரையோரப் பகுதியை அண்டிய மன்னார்க் குடாப் பகுதியாகும். இப்பகுதி நீண்ட காலமாகத் தமிழ் அரசான யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அத்துடன், இலங்கையின் முத்துக்குளிப்புத் தொழிலில் இலங்கையின் வடபகுதியைச் சேர்ந்த கரையோரப் பகுதி மக்களுடன் பெருமளவிலான தமிழ்நாட்டுக் கரையோரப் பகுதி மக்களும் ஈடுபட்டிருந்தனர். தமிழகத்தின் பாண்டிநாட்டுக் கரையோரப் பகுதிகள் பண்டைக்காலம் தொட்டே முத்துக்குளிப்புக்குப் பெயர் போனவை.

பண்டைய தமிழகத்தில் குறிப்பாக முத்து வளமிக்க கீழைக்கடலோரத்தில் தூத்துக்குடி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், தென் ஆற்காட்டின் கரையோயங்களில் முத்து எடுக்கப்பட்டது. இத்தொழில் பரதவர் எனப்படும் சமூகத்தினர் ஈடுபட்டு வந்துள்ளனர். இப்பகுதியில் கிடைத்த முத்து கீழை முத்து என பெயர் பெற்றதாக வரலாறு தெரிவிக்கிறது. இலங்கையில் உள்நாட்டுப் போர்களின் காரணமாக இத்தொழில் நிறுத்தி வைக்கப்பட்டது.

முத்தரிப்பு துறையில் முத்து குளிப்பில் ஈடுபட்டவர்கள் பரவ சமூகத்தை சேர்ந்தவர் இவர்கள் முள்ளிக்குளத்தில் இருந்து போசாலைவரை கடற்கரை அண்டிய பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த முள்ளிக்குளம், வங்காலை, தாழ்வுபாடு போசாலை, சிலாவத்துறை, போன்ற பிரதேசங்களில் உள்ள பரவ சமூகத்தினர் குறிப்பிட்ட சிலர் கடலுடன் தொடர்புபட்ட அட்டை பிடித்தல், சங்கு குளித்தல் போன்ற நிகழ்வுகளில் இன்றும் ஈடுபட்டிருப்பதையும் அறியக் கூடியதாக உள்ளது.

கடலுக்கு அடியில் முத்துச் சிப்பிகள் விளையும் இடம் ”பார்” எனப்பட்டது. முத்துக் குளிக்கும் பார்கள் மன்னாரில் மேற்குக் கரைகளில் அதிகம் இருந்து உள்ளன. முத்துக்குளிப்புப் பகுதியில் 19 பார்கள் வரை இருந்ததாகத் தெரிகிறது. அவை அவற்றுக்கு அண்மையில் உள்ள இடங்களின் பெயர்களால் அழைக்கப்பட்டன.

**கொண்டச்சிப் பார்**
**சிலாபம் பார்**
**காரைதீவுப் பார்**
**பெரிய காரைப் பார்**
**செவ்வல் பார்**
**மோதரகம் பார்**
**அரிப்புப் பார்**

மன்னார் பிரசேத்தில் வருடாவருடம் சித்திரை, வைகாசி மாதங்களில் முத்துக் குளித்தல் நடைபெற்றுள்ளது. இதற்குரிய ஆயத்தங்கள் பெப்ரவரி மாதம் முதல் செய்யப்படுவது வழக்கம். இதில் இத்தொழிலுடன் தொடர்புபட்ட அடிப்படைவசதிகளான மருத்துவ வசதிகள், வாடிகள், ஓய்வு விடுதிகள், களஞ்சிய அறையமைப்பு,கடைகள் இங்கு நடை




பெறும் முத்துக்குளிக்கும் அழகிய கைத்தொழிலைப் பார்வையிட உள்ளூர், வெளியூர் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள், சிறுவர்கள், ஆண்கள் போன்றோர் குடும்பம் குடும்பமாக வருகை தந்து பார்வையிட்டுவந்துள்ளனார்

பிரித்தானியர் வருமானத்திற்கு முத்து பாரிய பங்களிப்பைச் செய்தமையால் அத்தொழிலைக் கண்காணிப்பதற்காகவும், வரி அறவிடுவதற்காகவும் பிரித்தானிய பிரதமரின் மகன் ஆளுனர் ப்ரெட்றிக்

# பாண்டிய பேரரசு




நோத் அவர்களால் ‘டொரிக்’ எனப்படும் 3மாடிக் கட்டிடம் சிலாபத்துறை அரிப்பு வீதியில் களிமண் ஓடைக்கு மேற்காகவும், வீதிக்கு தெற்கிலும் கடற்கரைப்பக்கமாக அமைக்கப்பட்டது.

இக்கட்டிடம் அமைக்கும் போது கடல் தூரத்தில் இருந்ததாக அறிய முடிகின்றது. இன்று இக்கட்டிடம் கடல் அலையால் மோதப்பட்டுக் கொண்டு அழிவின் விளிம்பில் உள்ளது. இக்கட்டிடத்தை இப்பிரதேச மக்கள் அல்லிராணிக் கோட்டை எனவும் அழைக்கின்றனர். இக்கட்டிடத்தின் சாயல் கிரேக்க கட்டிட அமைப்பில் உள்ளது.

காலனித்துவக் காலப்பகுதியின்போது 16ஆம் நூற்றண்டு தொடக்கம் அரசாங்கத்துக்குச் சொந்தமான முத்துப்படுக்கைகள் சுழியோடிகளுக்கும் வாத்தகர்களுக்கும் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. முத்து அகழ்வுத் தொழில் 67 வருடங்களாக வெற்றிகரமாக இருந்துவந்தபோதிலும் 1881ஆம் ஆண்டளவில் விநியோகிப்பதற்கு சிப்பி கள் இல்லாமல் போனதை அரசாங்கம் அவதானித்திருந்தது. 1924ஆம் ஆண்டளவில் முத்து அகழ்வுத் தொழிலை ஒழுங்குபடுத்துகின்ற சட்டமொன்றை அமுலுக்கு கொண்டுவந்தது. இருப்பினும் அங்கு முத்துச் சிப்பிகள் எதுவுமே இல்லாதபோது அச்சட்டம் மிகவும் தாமதமானதாகவே வந்திருந்தது.

தொடர்ச்சியான முத்துக்குளித்த லால், முத்துப் படுகைகள் அழிந்து போயின.

1960ல் சிலாபத்துறையில் நோர்த் ஸ்டார், கனேடியன் ஆகிய படகுகள் மூலம் இலங்கை அரசு முத்துக்குளித்தலில் ஈடுபட்டது. இதுவே, மன்னார்ப்பிரதேச இறுதி முத்துக்குளிப்பாகும். 1961-க்கு பிறகு, மன்னார் வளைகுடா கடல் பகுதியில் முத்துக்குளித்தல் நடைபெறவில்லை.

ஆனால், சங்கு குளித்தல் இன்று வரை தொடர்கிறது. சங்கு குளிப்போர், ‘டர்பினெல்லா பைரம்’ எனப்படும், ஹபால் சங்கை’ குறி வைத்துதான் கடலுக்குள் செல்கின்றனர். இவ்வகை சங்குகள், இந்து மற்றும் புத்த மதத்தில் புனிதத்துவம் வாய்ந்தவையாக கருதப்படுகின்றன. சங்கு குளிப்போர், கடலில் 20 மீட்டர் ஆழம் வரை மூச்சுப்பிடித்து நீந்திச்சென்று சங்கு குளிப்பர். பால் சங்குகளை உயிரோடு கடலுக்கு அடியில் இருந்து எடுத்து வருவர். அதன் சதையை மாமிசமாக பயன் படுத்திவிட்டு, சங்கை விற்பனை செய்வர். பாதுகாப்பான சங்கு குளித்தலுக்கு வகை செய்யும் விதிமுறைகளை மீன்வளத்துறை வகுக்க வேண்டும்.

●மன்னாரில் முத்து தொழில் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்ன?

நிலையான நடைமுறைகள் இன்றி அதிகப்படியான முத்து அறுவடையானது மன்னாரில் முத்து தொழில் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

●இயற்கைச் சுற்றாடலை சாதாரணமாக மிக அதிகமாகவே மனிதன் பயன்படுத்துகிறான். விலங்கினங்களும் தாவரங்களும் வளரவும் பெருகவும் வேண்டும். ஆயினும் சிலவேளைகளில் இத்தகைய விலங்கினங்களும் தாவரங்களும் பெருகவும் வளரவும் சந்தர்ப்பமளிக்கப்படாமல் மனிதனால் பிடிக்கப்பட்டு அல்லது அறுவடை செய்யப்பட்டு விடுகின்றன. இவ்வாறு தொடர்ந்து நடைபெறும்போது, அடுத்த தடவை பிடிப்பதற்கோ அல்லது அறுவடை செய்யவோ போதுமானளவுக்கு அவை கிடைக்காதுபோகின்றன. அத்துடன் அவை இனப்பெருக்கம் செய்ய முடியாத நிலை ஏற்படும் .இவ்வாறு முத்துகள் தொடர்பான முகாமைத்துவம் இல்லாமையால் இன்று மன்னாரில் முத்துக்களும் முத்து குளிப்பும் அழிவடைந்துவிட்டது.

‘’Periplus of the Erythraean Sea’’ ( The Periplus of the Erythraean Sea or Periplus of the Red Sea) கடல்சார்ந்த எகிப்தியர் பற்றிய ( கிரேக்க-ரோமன் ) படைப்பாகும். இது நம்மிடம் வந்த பழங்கால இலக்கியங்கள் அனைத்திலும் கருப்பொருளாக தனித்துவமானது. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பிரதி 1816 முதல் ஹைடெல்பெர்க் பல்கலைக்கழக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள

A periplus என்பது பாய்மரப் பயணம் மற்றும் வணிக, அரசியல் மற்றும் இனவியல் விவரங்களைப் பதிவுசெய்த துறைமுகங்கள் பற்றிய பதிவு புத்தகமாகும். வரைபடங்கள் பொதுவான பயன்பாட்டில் இருந்த ஒரு காலத்தில், இது ஒரு கலவையான அட்லஸ் மற்றும் பயணிகளின் கையேடாக செயல்பட்டது. இது செங்கடலின் கடற்கரையில் உள்ள Berenice Troglodytica ரோமானிய எகிப்திய துறைமுகங்களிலிருந்து Horn of Africa ( கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள தீபகற்பம்) பாரசீக வளைகுடா, அரேபிய கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல், பாகிஸ்தானின் நவீனகால சிந்து பகுதி உட்பட இந்தியப் பெருங்கடலைச் சுற்றியுள்ள நிலங்களைப் பற்றி வழிசெலுத்தல் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை, பண்டைய ஹெலனிக் உலக நுண்ணறிவுகளை துல்லியமான விவரிக்கிறது. ஆசிரியர் தெரியவில்லை என்றாலும் முதல் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட வெவ்வேறு தேதிகளுக்கு உரை கூறப்பட்டுள்ளது, ஆனால் முதல் நூற்றாண்டின் நடுப்பகுதி இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.



இந்தியாவின் தென்மேற்குப் பகுதிகள் அப்பகுதியை நன்கு அறிந்த ஒருவரின் நேரடி விளக்கமாகும்,

●தமிழக வரலாற்றை பொறுத்தவரை இதில் தமிழகத்தின் துறைமுகங்கள் பற்றிய விரிவான குறிப்புகள் உள்ளன.

●இதை பெரிப்ளசு, டொலமி காலங்களில் பயன்படுத்தியுள்ளனர்.

●இதை வைத்து ரோம், சங்க காலத் தமிழகம் போன்றவற்றின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஆராயலாம்.

அடுத்த வாரமும் முத்துக்குளிப்போம்..



# வலுவடையும் இலங்கை ரூபாய்!

**உள்ளூர் மற்றும் சர்வதேச சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளும்போது எதிர்காலத்தில் வெளிநாட்டு நாணயத்திற்கு எதிராக குறிப்பாக அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு என்னவாக இருக்கும்? அவ்வாறு அதை கணிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் என்ன?**






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

கடந்த வார தொடர்ச்சி...

• தகவலறிந்து முழுமையான விபரத்துடன் இருங்கள்: இலங்கை மற்றும் அமெரிக்காவில் பொருளாதார நிலைகளை அறிந்து இருங்கள். ஏனெனில் இவை பரிமாற்ற வீதத்தை பாதிக்கலாம். நீங்கள் நிதிச்செய்தி ஆதாரங்களைப்பின்தொடரலாம் அல்லது நிதி ஆலோசகருடன் கலந்தாலோசிக்கலாம்.

• தொழில்முறை ஆலோசனையைப் பெறவும்: உங்கள் தனிப்பட்ட இடர் சகிப்புத்தன்மை மற்றும் நிதி இலக்குகளை கணக்கில் எடுத்துக்கொண்டு தனிப்பயனாக்கப்பட்ட முதலீட்டுத்திட்டத்தை உருவாக்க நிதி ஆலோசகர் உங்களுக்கு உதவ முடியும்.

• உங்கள் விருப்பங்களை கவனமாக பரிசீலிப்பதன் மூலமும், தேவைப்பட்டால் தொழில்முறை ஆலோசனையைப்பெறுவதன் மூலமும், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாய்மதிப்பு அதிகரிப்பின்விளைவுகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு உத்தியை உருவாக்கிக் கொள்ளலாம்.

வெளிநாட்டு நாணயத்திற்கு எதிராக (குறிப்பாக அமெரிக்க டொலருக்கு) ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி ஏற்படுமாயின் இலங்கையில் பொது மக்களும்மற்றும்வரிசெலுத்துவோரும் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். தங்களை பாதுகாப்பதற்காக என்ன எதிர்கால உத்திகள் உள்ளன என்பதனை இப்பொழுது பார்ப்போம்.

வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக, குறிப்பாக அமெரிக்க டொலருக்கு (ருளனு) எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி ஏற்ற இறக்கம் பொது மக்களுக்கும் வரி செலுத்துவோருக்கும் சவால்களை ஏற்படுத்தலாம். எதிர்கால மாற்று விகிதங்களைக் கணிப்பது இயல்பாகவே சிக்கலானது என்றாலும், குறிப்பிடத்தக்க ரூபாய் மதிப்பிழப்பிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தனிநபர்கள் கருத்தில் கொள்ளக்கூடிய சில சாத்தியமான உத்திகள் இங்கே:

**பொது மக்களுக்கான உத்திகள்:**

• சேமிப்புகளை பல்வகைப்படுத்துங்கள்: உங்கள் இடர் சகிப்புத்தன்மை மற்றும் நிதி இலக்குகளுக்கு ஏற்ப சாத்தியமானால், மற்ற நாணயங்கள் அல்லது தங்கம் போன்ற சொத்துக்களில் பல்வகைப்படுத்துவதைக் கருத்தில் கொண்டு ரூபாய் மதிப்பிலான சேமிப்பை மட்டுமே நம்பியிருப்பதைக் குறைக்கவும். இருப்பினும், பல்வகைப்படுத்தல் அதன் சொந்த அபாயங்களைக் கொண்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

• அறிவு மற்றும் திறன்களில் முதலீடு செய்யுங்கள்: கல்வி, பயிற்சி அல்லது திறன் மேம்பாட்டில் முதலீடு செய்வதன் மூலம் உங்கள் வேலை வாய்ப்பு மற்றும் வருமானத் திறனை மேம்படுத்தி, பணவீக்கத்தை விட முன்னேறி, அதற்கேற்ப உங்கள் செலவுப் பழக்கத்தை சரிசெய்யவும்.

• நீண்ட காலத்திற்கான திட்டம்: சாத்தியமான பொருளாதார ஏற்ற இறக்கங்களைக் கருத்தில் கொண்டு, யதார்த்தமான சேமிப்பு மற்றும் செலவு இலக்குகளை அமைக்கும் நீண்ட கால நிதித் திட்டத்தை உருவாக்குங்கள்.

• தகவலறிந்து முழுமையான விபரத்துடன் இருங்கள்: ரூபாயின் மதிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் மற்றும் தகவலறிந்த நிதி முடிவுகளை எடுக்க பொருளாதாரச் செய்திகள் மற்றும் நிதிச்சந்தைப் போக்குகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும்.

**வரிசெலுத்துவோருக்கான உத்திகள்:**

• பொறுப்பான வரித் திட்டமிடலில் ஈடுபடுங்கள்: சட்டக் கட்டமைப்பிற்குள் வரிச் சேமிப்பு வாய்ப்புகளை ஆராய தகுதிவாய்ந்த வரி ஆலோசகரை அணுகவும். பணமதிப்பு நீக்கத்தின் போது உங்கள் நிதிச் சுமையை நிர்வகிக்க உதவும்.

• உறுதியான நிதிக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம்: உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லது தொடர்புடைய அரசாங்க அமைப்புகளுடன் உங்கள் உண்மை நிலவரத்தை தெரிவிக்கவும். பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நீண்ட கால வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொறுப்பான நிதிக் கொள்கைகளுக்காக வாதிடவும்.

• அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைத்திருங்கள்: பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பொதுமக்களுக்கு அவற்றின் தாக்கம் குறித்து அரசாங்கத்திடம் இருந்து வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றைக் கோருங்கள்.

இவை பொதுவான உத்திகள் என்பதை நினைவில் கொள்வது முக்கியம். மேலும் தனிப்பட்ட சூழ்நிலைகள், இடர் சகிப்புத்தன்மை மற்றும் நிதி இலக்குகளைப் பொறுத்து மிகவும் பொருத்தமான அணுகுமுறை மாறுபடும். ஒரு தகுதிவாய்ந்த நிதி ஆலோசகருடன் கலந்தாலோசிப்பது, ஏற்ற இறக்கமான நாணயத்தின் போது உங்கள் நிதிகளை நிர்வகிக்க தனிப்பயனாக்கப்பட்ட உத்தியை உருவாக்க உங்களுக்கு உதவும்.

**கூடுதல் பரிசீலனைகள்:**

• உலகளாவிய பொருளாதார நிலைமைகள்: அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட உலகளாவிய பொருளாதார காரணிகளாலும் இலங்கை ரூபாவில் தாக்கம் உள்ளது.

• கட்டமைப்பு சீர்திருத்தங்கள்: நீண்ட கால, நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு



பெரும்பாலும் பொருளாதாரத்தில் உள்ள கட்டமைப்பு சிக்கல்களைத் தீர்க்க வேண்டும். மேலும் தனிநபர்கள் இந்த பரந்த செயல்முறைகளில் மட்டுப்படுத்தப்பட்ட செல்வாக்கைக் கொண்டிருக்கலாம்.

பொருளாதார நிச்சயமற்ற நிலைமைகளுக்கு செல்ல அறிவு, திட்டமிடல் மற்றும் தழுவல் ஆகியவற்றின் முழுமைத்துவம் தேவை என்பதை நினைவில் கொள்வது அவசியம். தகவலறிந்து இருப்பதன் மூலமும், பல்வேறு உத்திகளை ஆராய்வதன் மூலமும், தேவைப்படும்போது தொழில்முறை வழிகாட்டுதலைப் பெறுவதன் மூலமும், தனிநபர்கள் நாணய ஏற்ற இறக்கங்களுடன் தொடர்புடைய சவால்களிலிருந்து தங்களைத் தாங்களே சிறப்பாகப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

வெளிநாட்டு நாணயத்திற்கு எதிராக (குறிப்பாக அமெரிக்க டொலருக்கு) இந்த வகையான ரூபாயின் ஏற்ற இறக்கங்களில் இருந்து பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கையில் பொது மக்கள் மற்றும் வரி செலுத்துவோர் தொடர்பான கொள்கை வகுப்பாளர்களின் பங்கு மற்றும் பொறுப்பு என்ன?

பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் பொது மக்கள் மற்றும் வரிசெலுத்துவோர் நலனைப் பாதுகாப்பதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் பொறுப்பு உள்ளது. வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரான ரூபாயின் மதிப்பை பாதிக்கக்கூடிய மேலாண்மை காரணிகள் இதில் அடங்கும்:

- நாணயக் கொள்கை: இலங்கை மத்திய வங்கி (CBSL) ரூபாயின் மதிப்பில் செல்வாக்கு செலுத்த வட்டி விகிதங்கள் மற்றும் அந்நிய செலாவணி தலையீடுகள் போன்ற பணவியல் கொள்கைக் கருவிகளைப் பயன்படுத்தலாம்.
- நிதிக் கொள்கை: அரசாங்கத்தின் செலவு மற்றும் வரிவிதிப்பு முடிவுகள் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கலாம். இது ரூபாயின் மதிப்பை மறைமுகமாகப் பாதிக்கின்றது.
- வர்த்தகக் கொள்கை: கட்டணங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் போன்ற வர்த்தகக் கொள்கைகள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விலைகளை பாதிக்கலாம். இது ரூபாயின் மதிப்பை பாதிக்கின்றது.

இலங்கை அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியை நிவர்த்தி செய்ய கருத்தில் கொள்ளக்கூடிய சில குறிப்பிட்ட உத்திகள் இங்கே:

- பணவீக்கம் மற்றும் அரசாங்கக் கடனை நிர்வகிக்க விவேகமான பணவியல் மற்றும் நிதிக் கொள்கைகளை செயல்படுத்துதல், ரூபாயை நிலைப்படுத்த உதவும்.
- இறக்குமதிகள் மற்றும் வெளிநாட்டு நாணய வரவுகளை நம்பியிருப்பதைக் குறைப்பதற்காக பொருளாதார பல்வகைப்படுத்தலை ஊக்குவித்தல், பொருளாதாரம் வெளிப்புற அதிர்ச்சிகளால் பாதிக்கப்படுவதைக் குறைக்கின்றது.
- அந்நிய நேரடி முதலீட்டை (குனுஜ) ஊக்குவித்தல். இதன் மூலம் வெளிநாட்டு நாணய வரவுகளை ஈர்க்கவும், பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கவும் உறுதுணையாக இருக்கும்.
- ரூபாய் மதிப்பை நிலைநிறுத்த அந்நியச் செலாவணி சந்தையில் தேவைக்கேற்ப தலையிட்டு ஆரோக்கியமான அந்நியச் செலாவணி கையிருப்பை பராமரித்தல்.

ரூபாய் மதிப்பு சரிவை நிவர்த்தி செய்வது ஒரு சிக்கலான சவாலாக உள்ளது மற்றும் எளிதான தீர்வுகள் இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பல்வேறு உத்திகளின் செயல்திறன் பல்வேறு பொருளாதார காரணிகள் மற்றும் உலகளாவிய நிலைமைகளைப் பொறுத்துள்ளது என்பதை நாம் ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கருத்தில் கொள்ள வேண்டிய சில கூடுதல் விபரங்கள் பின்வருமாறு:**

- ரூபாய் மதிப்பு சரிவை நிவர்த்தி செய்வதற்கான அரசாங்கத்தின் திறன் பெரும்பாலும் வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள் மற்றும் அரசியல் அழுத்தங்கள் போன்ற பல்வேறு காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றது.
- உட்கட்டமைப்பு மற்றும் கல்வியை மேம்படுத்துதல் போன்ற நீண்ட கால கட்டமைப்பு சீர்திருத்தங்கள் நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் மாற்று விகித ஸ்திரத்தன்மைக்கு முக்கியமானவை.
- பொருளாதார நிச்சயமற்ற காலங்களில் பொதுமக்களின் நம்பிக்கையையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திடமிருந்து வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல் தொடர்பு அவசியம்.

ஒட்டுமொத்தமாக, ரூபாவின் பெறுமதி ஏற்ற இறக்கங்களின் எதிர்மறையான விளைவுகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதில் இலங்கை அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளனர். பொருத்தமான கொள்கை நடவடிக்கைகளின் கலவையை செயல்படுத்துதல், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், மற்றும் வெளிப்படைத் தன்மையை வளர்ப்பது ஆகியவை இந்த திசையில் முக்கியமான படிகளாக அமைகின்றன.

வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாயின் ஏற்ற இறக்கம், பொது மக்களுக்கும் வரி செலுத்துவோருக்கும் சவால்களையும் வாய்ப்புகளையும் முன்வைக்கின்றது. தனிநபர்கள் தனிப்பட்ட நிதிகளை நிர்வகிப்பதற்கு பல்வேறு உத்திகளைக் கடைப்பிடிக்க முடியும் அதே வேளையில், இலங்கை அரசாங்கம் மற்றும் கொள்கை வகுப்பாளர்களிடம் சிறந்த பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்துதல், நீண்ட கால வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் ஏற்ற இறக்கமான நாணயத்திற்கு முகங்கொடுத்து அவர்களின் குடிமக்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிப்பது போன்றவற்றின் இறுதிப் பொறுப்பு உள்ளது.

தகவலறிந்த தனிப்பட்ட நடவடிக்கைகள், பொறுப்பான அரசாங்கக் கொள்கைகள் மற்றும் மாறிவரும் பொருளாதார யதார்த்தங்களுக்குத் தொடர்ந்து மாற்றியமைத்தல் ஆகியவற்றின் மூலம், இலங்கை இந்தச் சவால்களை வழிநடத்தி மேலும் நிலையான மற்றும் வளமான எதிர்காலத்திற்காக பாடுபட முடியும்.

# பிரச்சினைகளும் சவால்களும்தான் சாதிக்கும் உத்வேகத்தை தருகிறது

**நேர்கண்டவர் - ஞானம் கவினி**

> **உண்மையில் சுய தொழில் என்பது என்னுடைய கௌரவம், நான் என்னுடைய குடும்பத்திற்காக சம்பாதிக்கிறேன். என்னுடைய குடும்பத்தை தாங்குகிறேன். அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிறேன் என்கின்ற மிகப்பெரும் நம்பிக்கை இப்போது என்னிடம் இருக்கின்றது**

பிரச்சினைகளும் சவால்களும் தான் வாழ்க்கையில் சாதிப்பதற்கான உத்வேகத்தை தருகின்றன என்கிறார், இலங்கையின் சாவகச்சேரி பிரதேசத்தை தனது தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட மதி அமுதன் பிரசாந்தி.

குழந்தை பருவத்தில் இருந்தே ஒவ்வொரு தடவையும் சவால்களை தனக்கு சாதகமாக பயன்படுத்தும் திறனை தனக்குள் வளர்த்துக் கொண்டிருக்கிறார் இவர் .

பெண்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள், தமக்கென்று வாழ்க்கையின் பிடிமானங்களை தக்க வைத்துக் கொள்வதற்கு போராடும் மனோ பக்குவம் தான், அந்த வாழ்க்கை உடைந்து போன பின்னம் இந்த சமூகத்தோடும் உலகத்தோடும் போராடும் வல்லமையை



நமக்கு தருகிறது என்று கூறும் இந்த வெற்றிப் பெண்ணின் கதை சமூகத்தில் உள்ள பலருக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது.

தனது பள்ளிப் பருவ காலங்களில் இருந்தே துடிப்பும், சுறுசுறுப்பும் மிச்சவரான பிரசாந்தி பாடசாலை காலத்தின் இடைப்பகுதியிலேயே திருமண பந்தத்திற்குள் நுழைந்து கொள்கிறார். ஆனால் சில வருடங்களிலேயே திருமணத்தை குறித்த அத்தனை கனவுகளும் நொறுங்கிப் போய் விடுகிறது .

முத்து முத்தான மூன்று குழந்தைகளுக்கு தாயாக இந்த சமூகத்தில் தனித்து இயங்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தமான சூழலில் , மன உளைச்சல்களை புறக்கணித்துவிட்டு மிகவும் தன்னம்பிக்கையோடு தனக்கான வாழ்வை தானே கட்டமைத்துக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார் இவர். அதிகாலையில் எழுந்து தன்னுடைய கடமைகளை முடித்து குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பி விட்டு தையல் இயந்திரத்தின் முன்னால் உட்கார்ந்தால், சில வேளைகளில் குழந்தைகளுடைய வேலைகள் தவிர தன்னுடைய உழைப்பு இரவு இரண்டு மூன்று மணி வரை தொடர்கிறது என்று சொல்கிற இவரிடம்,

உங்களுடைய உற்பத்திகளைப்பற்றியும் அதனுடைய சந்தைப்படுத்தல் பற்றியும் சொல்லுங்கள் என்று கேட்டபோது,

“ஆரம்ப காலத்தில் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான முடியை அலங்கரிக்கும் பொருட்களை உற்பத்தி செய்து வந்தேன் ,தற்போது கொஞ்சம் வித்தியாசமாக ஏதாவது செய்வோம் என்று சிந்தித்தேன், எனக்கு பைகளை உற்பத்தி செய்வதில் கொஞ்சம் ஆர்வம் இருந்தது .

ஆனால் பலர் இந்த தொழிலை செய்து வருவதால் அவர்களிடமிருந்து வேறுபட்டு கொஞ்சம் வித்தியாசமாக வேறு துணி வகைகளை கொண்டு பாடசாலைகளுக்கான பதில்களை வைக்கக்கூடிய பைகளையும், கர்ப்பிணி தாய்மார்கள் வைத்தியசாலைக்கு தமது பொருட்கள் அனைத்தையும் ஒன்றாக எடுத்துச் செல்லக்கூடிய பைகளையும் உற்பத்தி செய்து வருகிறேன். இவை தவிர தற்போது அழகழகான கைப்பைகளையும், மாணவர்கள் தமது பென்சில் பேனாக்களை வைத்துக் கொள்வதற்கான சிறிய ரக பைகளையும் உற்பத்தி செய்கிறேன்” என்று தெரிவித்தார்.

“ஆரம்பத்தில், எனக்கு இவற்றை சந்தைப்படுத்துவது பெரும் சவாலாக தான் இருந்தது. ஒரு தனி பெண்ணாக கடைகளுக்கு ஏறி இறங்கி அவர்களிடம் விலை பேசுவதும் பொருட்களை அறிமுகப்படுத்துவதோ எனக்கு புதிய விடயமாக இருந்தது. என்னுடைய ஒரு உற்பத்தியை அறிமுகப்படுத்துவதற்கு



மதியமுதன் பிரசாந்தி

மணிக்கணக்காக ஒரு கடையில் காத்திருக்க வேண்டிய தேவை எனக்கு இருக்கும். சில வேளைகளில் அப்படி காத்திருந்தும் கூட ஆர்டர் கிடைக்காமல் திரும்பிய நாட்களும் இருக்கிறது.

ஆனால் இதனை எல்லாம் கருத்தில் கொண்டு சோர்ந்து விடாமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்க தொடங்கினேன். இந்த ஏமாற்றங்கள் ஒவ்வொன்றும் எனக்கு அந்த நேரங்களில் சோர்வை தந்தாலும் பின்வரும் காலங்களில் நான் என்னை மாற்றி அமைத்துக் கொள்வதற்கும் சந்தைப்படுத்தல் பற்றிய கற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவியாக இருந்தது” என்கிறார்.

உங்களுக்கு சவாலாக அமைந்த விடயங்கள் எவை என்று வினவினோம், “உற்பத்தி செய்வது என்னுடைய கற்பனையில் இருந்து அல்லது என்னுடைய முயற்சியில் இருந்து நான் செய்வது ஆனால் சந்தைப்படுத்தல் என்று வரும் பொழுது தான் மிகுந்த சவால்களுக்கு நாங்கள் முகம் கொடுக்கின்றோம்.

நமது உற்பத்திகளைப் போலவே



தென்னிலங்கையில் இருந்தும் பொருட்கள் வந்து கொண்டிருக்கின்றன அவை மிகவும் குறைந்த விலையில் இங்கே விற்கப்படுகின்றன. அவற்றோடு ஒப்பிடும்போது எமது பொருட்கள் உற்பத்தி ரீதியில் தரமாக இருந்தாலும் விலை கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. அதனால், எமது சந்தையில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான கேள்வி மிகவும் குறைவாக இருக்கிறது.

இருந்தும்நாங்கள்குறைந்த லாபத்தோடு, கூடுதலான உற்பத்தியை செய்வதற்கு எத்தனிக்கின்றோம், உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு பலதரப்பட்ட நிறுவனங்கள் இருந்தாலும் , சந்தை படுத்தல் தொடர்பாக நாங்கள் யோசிக்கும் போது உள்ளூர் வணிக வணிக நிலையங்களையே கவனிக்க வேண்டி இருக்கிறது .

அவர்கள் தென் இலங்கையில் இருந்து வரும் பொருட்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்கிறார்கள். ஆனாலும் இந்த கம்பெனிகளோடு போட்டி போடும் அளவுக்கு கொஞ்சமாவது நாங்கள் வளர வேண்டும் என்பதுதான் எனது அவா என்கிறார் பிரசாந்தி.

அத்தோடு நிரந்தரமான ஒரு தொழில் அமைவிடமும் அல்லது நமக்கான வசிப்பிடமோ இல்லாத காரணத்தினால் எனது தொழில் வியாபார அனுமதியை பெற்றுக் கொள்ள முடியவில்லை. இது எனக்கு பெரும் சவாலாகவே இருக்கிறது. இந்த நடைமுறையில் ஏதாவது மாற்றம் ஏற்பட வேண்டும் என்று நினைக்கிறேன். உண்மையில் சொந்தமாக வசிப்பிடம் அல்லது தொழில்அமைவிடம்இல்லாதவர்கள் அல்லது பெருந்தொகை ஒன்றினை செலுத்தி வாடகைக்கு இடத்தினை பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் என்று இதுவரை வியாபார அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியாமல் என்னை போன்ற பலர் இருக்கிறார்கள்.

வியாபார அனுமதி கிடைக்காத பட்சத்தில் நாங்கள் சிறு கைத்தொழில் அபிவிருத்தி பிரிவினரால் வழங்கப்படுகின்ற பல்வேறு வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. இது ஒரு பெரிய நடைமுறை சிக்கல் இதனை உரியவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தன் சார்ந்த அனைத்து சுய தொழில் முயற்சியாளர் களுக்குமான ஒரு மிகப்பெரும் விண்ணப்பத்தினை உரிய அதிகாரிகள் இடத்தில் வைத்திருக்கிறார் மதியமுதன் பிரசாந்தி.

இப்படி கனவுகளை துரத்திக் கொண்டிருக்கும் பிரசாந்தியிடம், "இப்போதுஉள்ள நெருக்கடிகளில் பல பெண்கள் தமது குடும்பத்தின் பொருளா தாரத்தினை நிர்வகிக்க முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர் அவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன என கேட்டோம்.

பலருக்கு தாராளமாக நேரம்கிடைக்கிறது ஆனால் அவற்றினை பயன்படுத்தி கொள்வதற்கு நாங்கள் தவறி வருகிறோம். இக்கட்டான சூழல்கள் வரும் பொழுது நாங்கள்நேரத்தை எவ்வளவு விரையப்படுத்தி இருக்கிறோம் என்பதை யோசிக்க வேண்டி இருக்கிறது. ஆகவே பெண்கள் கிடைக்கிற நேரத்தில் தமக்கு தேவையானவற்றை தாமே நிர்வகிக்கக்கூடிய ஆளுமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது சுய தொழில்களை கற்றுக் கொள்வதற்கும், ஏனைய கல்வித்துறையில் மேலதிகமாக தேடிப் படிப்பதற்கும் யாரும் பின்னிக்கக் கூடாது என்று நான் நினைக்கிறேன். என்று வேகமாக பேசிக் கொண்டிருக்கும் பிரசாந்தி, பாடசாலை காலத்தில் தன்னால் தொடர முடியாத போன உயர்கல்வியை இப்போது கற்றுக் கொண்டிருக்கிறார்.

குடும்பத்தின்பொருளாதார தேவைகளை நிறைவேற்றுவது, குழந்தைகளை கவனித்துக் கொள்வது, தனது வெளிவாரி பட்டப்படிப்பினை தொடர்வது, இன்று பல்வேறு நெருக்கடிகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் மிக லாபகமாக சமாளித்துக் கொண்டு தனக்கு பிடித்தமான துறையான சித்திரத்துறையில் இன்றும் சிறுவர்களுக்கு பயிற்றுவிக்கும், சிறார்கள் பிடித்த ஒரு ஆசிரியராக திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

திருமணத்தின் பின் கல்வியை தொடர முடியாத பெண்கள் மிகவும் அவலமான நிலையை எதிர்நோக்குகிறார்கள். உண்மையில் திருமணத்தின் பின் வேலைக்கு போக வேண்டாம் அல்லது உயர் கல்வியை தொடர வேண்டாம் என்று யாராவது கூறினால், அந்த திருமணத்தை விட அவர்கள்தொழிலையோ கல்வியோ தெரிவு செய்வதுதான் மிக பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன் என்று மிகவும் அப்பட்டமாக ஒரு பெரிய உண்மையை எடுத்துச் சொல்கிறார் மதி அமுதன் பிரசாந்தி.

எதிர்காலத்தை முழுவதுமாக நம்பி யாருடைய கைகளிலோ ஒப்படைக்காமல், உன்னுடைய கைகளிலேயே உன்னுடைய எதிர்காலத்தை நீ வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் தீர்மானமாக இருக்க வேண்டும். அப்போதுதான் உன்னுடைய எதிர்பார்ப்புகள் உடைகின்ற போதும் உன்னுடைய உன்னுடைய கையில் இருக்கும் நம்பிக்கை உன்னை காப்பாற்றும் என்று கூறுகிறார்.

உண்மையில் சுய தொழில் என்பது என்னுடைய கௌரவம், நான் என்னுடைய குடும்பத்திற்காக சம்பாதிக்கிறேன். என்னுடைய குடும்பத்தை தாங்குகிறேன். அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிறேன் என்கின்ற மிகப்பெரும் நம்பிக்கை இப்போது என்னிடம் இருக்கின்றது. சின்ன சின்ன விடயங்களுக்கும் குடும்பத்தினரை எதிர்பார்த்து அவர்களை மாத்திரம் நம்பி இருப்பது என்பது உண்மையிலேயே நம்மை நாமே தாழ்த்திக் கொள்ளும் ஒரு விடயம் தான்.

இப்படி தொடர்ச்சியாக இருக்கும் போது ஒரு இடத்தில் எங்கேயோ நாங்கள் காணாமல் போய்விடுகிறோம். என்பதற்கான அடையாளத்தை இழந்து விடுகிறோம் அப்போது தான் "அட எனக்கு என்று எதுவும் இல்லையே" என்று எண்ணத் தோன்றுகின்றது. தொடர்ச்சியாக ஒருவரிடம் தங்கி இருக்கும் போது அவர்களுக்கும் நம்மில் மரியாதை குறைந்து விடும் என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும் ஆனாலும், இந்த சென்டிமென்ட் பெண்களை ஒரு மாயவலைக்குள் எப்போதும் சிக்க வைத்துக் கொண்டுதான் இருக்கிறது.

நான் கூற விரும்புவது ஒன்றே ஒன்றுதான் நேரமும் காலமும் இருக்கும்போது ஒவ்வொரு பெண்ணும் ஒரு சுய தொழிலை கற்றுக் கொள்ள வேண்டும். உயிரோடு இருக்கும் காலம் எல்லாம் நான் தனக்கென்று வாழும் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும் கணவன் பிள்ளைகள் என்று குடும்பத்தை தாங்கும் ஒரு பெண் தன்னையும் சம அளவில் மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். இப்படி இருக்கும்போது நாங்கள் யாருக்கு பாரமாகவும் இருக்க தேவையில்லை எல்லோருக்கும் உதவியாகவும் இருக்கலாம்.

காலம் எல்லாவற்றையும் நமக்கு கற்றுத் தரும் என்று நம்பி இருக்காமல் இருக்கின்ற நேரத்தில் எல்லாவற்றையும் நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று மிகவும் ஆர்வத்தோடு பேசும் பிரசாந்தியிடம் இருந்து விடை பெற்றோம்.

**சீனாவைக் கைப்பற்ற மங்கோலியர்கள் முயற்சி செய்த போது அங்கு தமது அபினி வியாபாரத்தை தொடங்கி மிக வேகமாக சீன இளைஞர்களை போதையில் மிதக்க பழக்கினார்களாம். மங்கோலியப்படை உள்நுழைந்தபோது சீனாவில் தொண்ணூறு சத வீதமானவர்கள் போதையில் இருந்தார்களாம் என படித்திருக்கிறேன். இன்றைய இலங்கையில் மிக வேகமாக பரவி வரும் தொற்றுநோய் இந்த போதைவஸ்து.**

# மதுவாகும் வியர்வை

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“நாம ஆடுவதும் பாடுவதும் காசுக்கு! ஆடிக் குல்லா போடுவதும் காசுக்கு” என்றொரு பழைய சினிமாப்பாடல் இருந்தது. இந்தப்பாடல்உண்மையில்நடைமுறையைப் பாடுகிறது. காலங்காலமாக தொழில் கொள்வோர் தமது நிதியைப்பட பெருக்கிக் கொள்ள எந்த வழியையும் கையாளக் கூடியவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

வழிகள் எப்படி இருப்பினும், பணம் கொட்டோ கொட்டென்று கொட்டக்கூடிய வழிகளே பிரபலமாயின. இதில் பாவம் புண்ணியம் அபிவிருத்தி அநியாயம், இல்லை அடுத்தவர் குடியை கெடுத்தல் என எல்லா வழிகளும் இருந்தன. இன்னைக்கும் ஒருவர் திடீரென பணக்காரர் ஆகும்போது அயலவர்கள் சந்தேகப்படுவது இதனால்தான். அப்படி முறையான உழைப்பில் முன்னேறியவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

உலகின் பெரும் பணக்காரர்களே ஊழலில் மாட்டிக்கொள்ளும் காலம் இது. ஆனால் இலங்கையின் வரலாற்றில் அரசாங்கங்களையே ஆட்டிவைத்த பெரும் புள்ளிகளின் சம்பாத்தியம் பற்றி மிகுந்த அக்கறையான ஆய்வொன்று வெளிவந்திருக்கிறது. அதன் அடிப்படையில் பார்க்கும் போது இன்றைய எமது மக்களை போதையிலிருந்து மீட்க எம்மால் எதுவும் செய்ய முடியாது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.



மக்களுக்கு போதிய ஊதியம் இல்லை. என்பது ஒருபுறமிருக்க அந்த பற்றாக்குறை ஊதியத்திலும் கணிசமான பகுதி சாராயம், கள் போன்ற போதைப் பொருட்களுக்கும் சிகரட் பீடி வெற்றிலை போன்ற லாகிரிப் பொருட்களுக்கும் செலவாகிறது. மீதமுள்ள தொகையில் மட்டமான உணவு வகைகளையே அவர்களால் கொள்வனவு செய்து உண்ண முடிகிறது. அதன்பயனாக விரைவில் நோய்வாய்ப்படுகிறார்கள்.

ஒரு நசரசபையின் செயலர் நகரை சுத்தம் செய்வதில் ஏற்படும் பிரச்சனை பற்றி கூறியதாவது, “எம்மிடமுள்ள நகர சுத்தி தொழிலாளர்கள் எழுபது பேர் அதில் முப்பதுவரை பெண்கள். அவர்கள் கூட்டவும் பெருக்கவும் செய்கிறார்கள். ஏனையவர்கள்தான் குழாய்கள் அடைப்பு நீக்கல் பாரமான பொருட்களைய நகர்த்தல் போன்ற வேலைகளை செய்ய வேண்டும். ஆனால் இவர்களில் பெரும்பாலானவர்கள் நோயாளர்களாக உள்ளனர். பார வேலைகளை செய்ய முடியாதவர்கள். நாற்பது வயதான ஒரு ஊழியரை நாம் பணி நீக்கம் செய்ய முடியாது. செய்தாலும் வேறு நபர்கள் கிடைக்கமாட்டார்கள். அவர்களது நோய்க்கு காரணமும் அவர்களது தொழில்தான். நாம் சுத்தமாக வாழ்வதற்காக அவர்கள் அழுக்குகளில் புரள்கிறார்கள். பின்னர் அதே கைகளால் உணவை உண்ண வேண்டுமாயின் அவர்களது அறிவு மயங்கியிருக்க வேண்டும். எனவே போதையேற்றிக் கொள்கிறார்கள். உண்ணும் உணவும் போசாக்கானது அல்ல.

நாம் குறிப்பிடுவது போதை பற்றியேயாகும். ஒவ்வாரு தடவையும் நிதி வரவு செலவு அறிக்கைகள் வரும்போதும் மதுபானங்களின் விலை அதிகரித்து செல்கிறது. எனவே விற்பனையில் லாபம்



பெருகுகிறது.

சாராய உற்பத்தி விற்பனை என்பவற்றிற்கான உரிமை சட்டப்படி அரசாங்கத்திற்குரியது. அரசாங்கம் இந்த அதிகாரத்தை குத்தகைக்காரர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் வழங்கியுள்ளது. சட்ட முறையற்ற சாராய உற்பத்தியும் விற்பனையும் இந்த குத்தகைக்காரர்களை மிகவும் பாதிக்கும். சாராயத்தை உற்பத்தி செய்வதையும் விற்பனை செய்வதையும் அரசாங்கம் கட்டுப்படுத்தும். ஆனால் கள்ளச்சாராய உற்பத்தி குத்தகைக் காரர்களையே பாதிக்கும். எனவே அவற்றை கண்டுபிடிக்கவும் தடுக்கவும் குத்தகைக்காரர்களே பெருமளவில் ஈடுபட்டனர். ஏனெனில் அரசாங்கமும் அவர்களது உதவியையே நாடியது.

இப்போது கள்ளச்சாராயத்தை கண்டு பிடிக்க புறப்பட்ட நல்ல சாராய குத்தகைக் காரர்கள் தாமே கள்ளச்சாராய உற்பத்தியை செய்வதிலும் விற்பதிலும் முனைப்பு கொண்டனர். சட்ட விரோத உற்பத்தியில் கலப்படம், அதிக விலை, என பெரிய லாபம் பெற முடிந்தது. அனுமதி கிடைக்காத பிரதேசங்களிலும் விற்பனை நடந்தது. சாராயத்தினால் வரும் சமூக தீங்கைப்பற்றி பொதுமக்களும் சமூக நலன் விரும்பிகளும் அக்கறை கொண்டு பிரச்சாரம் செய்தார்கள். அரசாங்கம் அதைப்பற்றி கொஞ்சமும் சிந்திக்கவில்லை. அதனால் கிடைக்கும் லாபத்தையே கருத்தில் கொண்டார்கள். மலையகத்தில் குத்தகைக்காரர்கள் அதிக தொழிலாளர்கள் தொழில் செய்யும் இடங்களில் தமது கடையை விரித்தனர். அப்படியான இடங்களை பெறுவதில் போட்டி நிலவியது.

மொத்தமாக ஒரு பொத்தல் மதுபானத்தின் விலையிலும் பார்க்க, கிளாஸில் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி குடிக்கும் ஒரு தொழிலாளி அந்த போத்தலின் ஒன்றரை மடங்கு பணத்தை செலுத்துகிறான். அதற்காகவே 'ரேஸ்ற்' கடை தவறணைகளின் அருகே முளைக்கின்றன. போதை என்ற சரக்கில் கோடிக்கணக்கான சொத்துகளை சேர்த்தவர்கள் தமது ஒவ்வொரு வேலைக்கும் உறவினர்களையே கூட்டுச் சேர்த்தனர். முற்காலத்தே முத்துக்குளிப்போர் கடலில் இறங்கி, சிப்பிகளை சேர்த்தபின் கயிற்றில் அவர்களை மேலே தூக்க வேண்டும். அதை செய்யாது போனால் கடலில் இறங்கியவர் இறந்து போகக் கூடும். எனவே இறங்குபவர் தன் நெருங்கிய உறவினரையே தனக்கு கயிறு பிடிப்பவராக கூட்டிச்செல்வார். அதேபோல இந்த சட்டவிரோத செயலுக்கும் உறவினர்களே கூட்டுச் சேர்வார்கள். இதனால் அவர்களை கண்டு பிடிப்பதோ அழிப்பதோ முடியாத காரியமாக இருக்கிறது இன்றுவரை.

சாராயத்தை வடிப்போர், அதை மொத்தமாக விற்போர், குத்தகை செய்வோர் போட்டியாளர், தவறணை நடத்துவோர், சில்லறை வியாபாரிகள். பாதுகாப்பு கடமை செய்வோர் அதை வண்டிகளில் ஏற்றி இறக்குவோர், இறுதி நுகர்வோக்கான விற்பனையை செய்வோர் என கள்ளச்சாராய உற்பத்தி தொடர்கிறது. கிராம முதலாளர்கள், பொலீஸ், விதானைமார், உள்ளூர் தனக்காரர்கள் என பெரிய கும்பலே இதில் லாபம் சம்பாதிக்கிறது. இன்றும் அன்றும் இந்த தொழிலில் ஈடுபடும் பெரியவரின் கையில் அதாவது கட்டுப்பாட்டில் ஒன்றிரண்டு கிராமமமே இருக்கும் அதை யாரும் மறுக்க முடியாது.

சீனாவைக் கைப்பற்ற மங்கோலியர்கள் முயற்சி செய்த போது அங்கு தமது அபினி வியாபாரத்தை தொடங்கி மிக வேகமாக சீன இளைஞர்களை போதையில் மிதக்க பழக்கினார்களாம். மங்கோலியப்படை உள்நுழைந்தபோது சீனாவில் தொண்ணூறு சத வீதமானவர்கள் போதையில் இருந்தார்களாம் என படித்திருக்கிறேன். இன்றைய இலங்கையில் மிக வேகமாக பரவி வரும் தொற்றுநோய் இந்த போதைவஸ்து. அது மாத்திரையாக, தூளாக, சொக்லட்டாக பல வகைகளில் நுழைந்துள்ளது. எடுத்த எடுப்பில் எந்த முடிவையும் எடுக்கும்படி மன உணர்வுகளைத் தூண்டும் ஆபத்தைக் கொண்டுள்ளது.

பாவப்பட்ட ஏழைகளின் உழைப்பையும் ஆரோக்கியத்தையும் கெடுத்து அவர்களை நடைப்பிணமாக அலைய விடுகிறது. தேசத்தின் நலனைப்பற்றி சிந்திக்க வேண்டாம் உங்களைப்பற்றி உங்கள் குடும்பத்தைப்பற்றி அக்கறையுடன் சிந்தித்தாலே இதிலிருந்து விடுபட முடியும்.

நீங்கள் நாள்முழுதும் உழைத்த பணம் பெரும் முதலாளிகளின் பெட்டியில் விழுகிறது. அதே பணத்தை வைத்து உங்களை அடிமைகளாக நடத்துகிறார்கள். அவர்கள் படுத்துறங்கும் மெத்தை பயணம் செய்யும் கார், உண்ணும் உணவு இவற்றுக்காக அவர்கள் வியர்வை சிந்தவில்லை. மதுபானத்தை சிந்துகிறார்கள். நீங்களோ நாள் முழுதும் வியர்வை சிந்தி உழைத்த பணத்தை அவர்களுக்கு கொட்டிக் கொடுக்கிறீர்கள். ஏழைத் தொழிலாளர்களே ஒரு போத்தல் சாராயத்தின் விலையில் சத்தான எவ்வளவோ உணவுகளை ஏன், நீங்கள் காணவே முடியாது என்றிருக்கும் சுவையான உணவுகளை வாங்கி உண்ணுங்கள்.



# பூசணிக்காய் பயிர்செய்கை முறை மற்றும் பயன்கள்



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



“பூசணிக்காயினை வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வகையான பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது. இருப்பினும் அதிக இடங்களில் பூசணிக் காய் மற்றும் பரங்கிக்காய் என்று அழைக்கப்படுகின்றது. பூசணிக்காய்“ பறங்கிக்காய் கொடிவகை காய்கறிகளில் ஒன்று. உலகில் உள்ள காய்கறிகளில் மிகப்பெரியது பூசணிக்காய் தான்.

பூசணிக்காயின் தாயகம் வடக்கு மெக்ஸிகோவும், தென்அமெரிக்காவாக இருந்தாலும் ஆசியாவில் அதிலும் தெற்காசியாவில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. பூசணி தமிழர்களின்பாரம்பரிய உணவுகளில் ஒன்றாகும் தற்பொழுது வரை இருந்து வருகின்றது. குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய காய்கறி என்பதற்காக மட்டும் பயன்படுத்துவது கிடையாது. கோடைக் காலத்தில் உடலில் உண்டாகும் வெப்பத்தினை பூசணிக்காய் தணிக்கிறது என்பதற்காகவும் தான் அதிக வீடுகளில் சமைக்கின்றார்கள். நம்மில் எத்தனை பேருக்கு தெரியும் ?



பூசணிக்காயினை உணவு உற்பத்திக் காக பயன்படுத்திவிட்டு அதன் விதைகளை வெளிநாடுகளில் பொதி செய்து. ஏற்றுமதி செய்கின்றார்கள் என்று.? எப்படி பயிரிடு வது? இரகங்கள் : இலங்கையில் அதிக அளவில் இந்தியன் ரகங்கள் நடுகை பண்ணப்படுகின்றது. உதாரணமாக கோ 1, கோ 2, அர்க்கா, சூரியமுகி மற்றும் சந்தன் ஆகிய இரகங்கள் பயன்பாட்டில் உள்ளது இருப்பினும் ஒரு சில பண்ணைகளில் ஹைபிரிட் இரகங்களை தேர்வு செய்து நடுகை செய்கின்றார்கள்.

விவசாயிகளாகிய நாங்கள் ஒன்றை நினைவில்வைக்க வேண்டும்முடிந்தவரை நாட்டு ரகங்களை தேர்வு செய்து நடுவது எனக்கு சிறந்ததாக இருக்கும் காரணம் நாட்டு ரகங்களுக்கு நோய் தாக்கம் ஏற்படுவது மிக மிக குறைவு அதேநேரம் ஹைபிரிட் ரகங்களை நோய்கள் தாக்குவது மிக மிக அதிகம். ஹைபிரிட் ரகங்களை நடுகை செய்வதால் நாட்டு ரகத்தோடு ஒப்பிடும்போது குறுகிய காலத்தில் உற்பத்தி செய்ய முடியும் என்பது உண்மைதான் ,

இருப்பினும்எமக்கு அதிக செலவீனத்தை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை பூசணிக்காய் ஆனது கோடைகால பயிர் என்பதால் ஜனவரி தொடக்கம் பிப்ரவரி வரை மற்றும் ஜீன் தொடக்கம் ஜீலை வரையிலான மாதங்கள் நடுகைக்கு ஏற்ற மாதங்கள் ஆகும். மணல் மற்றும் காளி,கிறவல் தவிர்ந்த அனைத்து நிலத்திலும் நன்கு வளரக்கூடியது குறிப்பாக செம்மண் நிலத்தில் அதிக விளைச்சலை கொடுக்கக் கூடியது.

புதிதாக காணிகள் துப்புரவு செய்து தீ வைத்த நிலங்களில் பூசணி அதிக விளைச்சலை கொடுக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இதனால் தான் பூசணி நடுகை செய்யும் போது விதைகள் நடப்படுகின்ற இடத்தை சுற்றி சாம்பல் தூவி விட்டு நடுகை செய்கின்றார்கள் பூசணி ஆனது நிலத்தில் படர்ந்து விரிந்து வளரக்கூடிய பயிர் என்பதால் அதிக இடைவெளியில் நடப்பட வேண்டும்.

ஆகவே ஏக்கருக்கு 250 கிராம் விதைகள்தேவைப்படும். விதைகள் நடும் பொழுது 30 ஒ 30 ஒ 30 செ.மீஎன்ற அளவில் குழி தோண்ட வேண்டும். அதோடு ஒவ்வொரு பாத்திக்கு இடைப்பட்ட இடைவெளி குறைந்தது 2.5 மீட்டர் இருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு பாத்திக்கும் இடைப்பட்ட தூரம் 7.5 - 7.5 அடி இடைவெளி இருக்க



வேண்டும் இதற்கும் குறைவான இடைவெளியில் பூசணி நடப்பட்டால் பயிரின் வளர்ச்சி குறைவடைந்து காய்க்கும் திறன் குறைவடையும்.

ஒருவேளை காய்கள் அதிகமாக பிடித்தாலும் காய்கள் பிஞ்சு பருவத்திலே உதிரும் எண்ணிக்கை அதிகரித்து எதிர்காலத்தில் காய்கள் சிறியதாக இருக்கும். இதனால் எனக்கு சந்தை வாய்ப்பும் பாதிக்கப்பட்டு. நட்டமும் ஏற்படும். பின்பு ஒவ்வொரு குழியிலும் மூன்று விதைகள் வீதம் நட வேண்டும். விதை நடும் பொழுது ஒவ்வொரு குழியிலும் குறைந்தது 1½2 கிலோ சாம்பல் அல்லது பத்தவைத்த உமி போன்றவற்றை சிறிது மண்ணோடு கலந்து. இட்டு நடுகை செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் முளைப்பு திறனும் அதிகமாக இருக்கும். அதோடு எதிர்காலத்தில் பயிர் சிறந்த வளர்ச்சியோடு அதிக விளைச்சலை கொடுக்கும். என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. விதை நட்டு நான்கு அல்லது ஐந்தாவது நாளில் விதை முளைத்து, இலைகள் துளிர்த்து விடும். இத்தருணத்தில் பாத்தியில் உள்ள ஆரோக்கியமான இரண்டு பயிரினை விட்டு ஏனைய ஒரு செடியினை பிடுங்கி எறிந்து விட வேண்டும். காரணம் தயார்படுத்தப்பட்ட ஒரு பாத்தியில் இரண்டு செடிகளுக்கு மேல் இருந்தால் எதிர்காலத்தில் அச்செடிகள் வீரியமாக வளராது.

பின்பு ஈரப்பதத்தைப் பொறுத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். சாதாரணமாக, வறண்ட காலங்களில் வாரம் இருமுறை அல்லது மூன்று முறை, கட்டாயம் நீர் பாய்ச்ச வேண்டும். பூசணி கோடைகால பயிர் என்பதால் பயிருக்கு நீர் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இயற்கை முறையில் பயிரிடுவதாக இருந்தால் வாரத்துக்கு ஒரு தடவை ஒன்று விட்டு ஒரு நாள் ஜீவாமிர்தம் மற்றும் மீன் அமிலத்தினை மாற்றி, மாற்றி தெளித்து வர வேண்டும்.

ரசாயன முறையில் பயிர் செய்கை மேற்கொள்வதாக இருந்தால் கட்டாயம் பயிர் முளைத்த 30 ஆவது நாளில் மீண்டும் ஒவ்வொரு பாத்திக்குள் அதாவது பாத்தியின் அடிப்பகுதியில் 15 - 20 கிராம் யூரியா வீதம் இட வேண்டும். இது பயிர் வளர்ச்சியை தூண்டுவதற்காக செய்யப்படுகின்றது. ஒவ்வொரு பாத்தியிலும் களைகள் இல்லாமல் பராமரிப்பது மிக முக்கியம். பயிர் முளைத்த நாளிலிருந்து மூன்றாவது வாரத்தில் கொடி படரத்தொடங்கும் போது முதல் களையும், பின்பு 40-ம் நாள் இரண்டாம் களையும் எடுக்க வேண்டும். கட்டாயம் எடுக்க வேண்டும் கிருமிநாசினிகளை பயன்படுத்தும் போது முடிந்தவரை இயற்கை நாசினிகளான அக்கினி அஸ்திரா, கற்பூர கரைசல், மூலிகை கரைசல், போன்றவற்றை பயன்படுத்துங்கள்.

ஒருவேளை ரசாயணங்களை பயன்படுத்த விரும்பினால் உடன் கொல்லி தவிருந்து ஊடுகொல்லி நாசினிகளை பயன்படுத்துங்கள். கிருமி நாசினியை பயன்படுத்தும் போது காலையில் பயன்படுத்த வேண்டும் அல்லது மாலை வேளையில் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக பூசணி பூக்க ஆரம்பித்த தருணத்தில் கிருமிநாசினி பயன்படுத்துவதை முற்றாக நிறுத்த வேண்டும். பூசணியை பொறுத்தவரை பழ ஈக்களின் தாக்கம் அதிகளவில் இருக்கும் இருப்பினும் இதனை கட்டுப்படுத்த.

வேப்பம் கொட்டை கரைசலை அல்லது வேப்ப எண்ணையினை பயன்படுத்தலாம். ஆரம்பத்திலிருந்து வாரத்திற்கு ஒரு தடவை மீன் அமீனத்தை தெளித்து வந்தால் பயிருக்கு நோய் தாக்குவது மிக மிக குறைவாக இருக்கும். அதோடு பயிர் எப்போதும் அடர் பச்சை நிறமாக இருக்கும். காய்கள் பச்சை நிறத்திலிருந்து மஞ்சள் நடத்திக்கு மாறும் போது அறுவடை செய்ய துவங்களாம். அதிலும் குறிப்பாக காயின் தண்டு பகுதி மஞ்சளாக மாறினால் காய் முற்றிவிட்டது என்று அர்த்தம். ஏக்கருக்கு 8 - 10 டன் காய்கள் உற்பத்தி செய்யலாம்.

ஒரு ஏக்கரில் அதிக நிறையில் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள் என்றால் அது பூசணி மட்டுமே. பண்ணையாளர்கள் எந்த தொழில் செய்வதாக இருந்தாலும் முதலில் சந்தை வாய்ப்பு உள்ளதா என்று பார்க்க வேண்டும். நீங்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு சந்தை வாய்ப்பு இல்லாத பட்சத்தில் தயவுசெய்து முயற்சிக்க வேண்டாம். பூசணியை பொறுத்தவரை சந்தை வாய்ப்பு உள்ளது. இருப்பினும் அதிக அளவில் உற்பத்தி செய்யும் போது சற்று கவனமாக இருக்க வேண்டும் மேற்கூறியதைப் போன்று ஏனைய காய்கறிகள் போன்று அல்லாமல் பூசணியானது உற்பத்தியின் அளவு அதாவது விளைச்சலில் அளவு அபாரவிதமாக இருக்கும்.



# தென்னை வெள்ளை ஈ தாக்கம் இயற்கை முறைக் கட்டுப்பாடு



**ஏற்றுமதிச் சந்தையில், கடந்த காலங்களில் ஆண்டுக்கு, 95 லட்சம் செவ்விளநீர் காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு வெள்ளை ஈ பாதிப்பு பரவி வருவதால், எதிர்காலத்தில் செவ்விளநீர் ஏற்றுமதிச் சந்தையும் பாதிக்கப்படலாம். ஏற்றுமதி மாத்திரமல்லாது இளநீர் வியாபாரம் செய்யும் மற்றும் இதனை சார்ந்துள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறிக்குள்ளாகின்றது...**

தற்போது தீவிரமாகப் பரவும் வெள்ளை ஈயினால் இலங்கையில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் தென்னந்தோப்புகள் சேதமடைந்துள்ளதாக அறிய முடிகிறது.

அதுமட்டுமல்லது வீடுகளில் உள்ள தென்னை, கொய்யா, அலங்கார பாம் செடிகள் போன்றவையும் இதன் தாக்கத்தால் பாதிக்கப்படுகின்றன.

இவை அதிகமாக செவ்விளநீர் குலைகளின் மஞ்சள் நிறத்தில் ஈர்க்கப்படுவதால் அவற்றை மிகவும் அதிகளவில் பாதித்துள்ளது.

ஏற்றுமதிச் சந்தையில், கடந்த காலங்களில் ஆண்டுக்கு, 95 லட்சம் செவ்விளநீர் காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு வெள்ளை ஈ பாதிப்பு பரவி வருவதால், எதிர்காலத்தில் செவ்விளநீர் ஏற்றுமதிச் சந்தையும் பாதிக்கப்படலாம்.

ஏற்றுமதி மாத்திரமல்லாது இளநீர் வியாபாரம் செய்யும் மற்றும் இதனை சார்ந்துள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறிக்குள்ளாகின்றது.

**நோய்த்தாக்கத்தின் பின்னணி**

அமெரிக்காவில் 2004-ல் , புளோரிடா மாகாணத்திலும் தென்னையில் கண்டறியப்பட்ட வெள்ளை ஈ, இந்தியாவில் முதல்முறையாக 2016-ம் ஆண்டு தமிழகத்தில் தென்னையில் தாக்கம் ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் நோய் தீவிரமாக பரவியபோது, ஒட்டும் பொறி அட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால், அதிக விலை கொடுத்து நஞ்சு பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்கி விசிறியும், எவ்வித பயனும் இல்லை என்பதையும், இதற்கு இவற்றின் இயற்கை இரைகவ்விகளான வண்டுகள் பூச்சி மருந்துகளால் அதிகம் அழிந்ததும் ஓர் காரணம் என அப்போதைய செய்திகள் மூலம் அறியமுடிகிறது.

2022 ஆம் ஆண்டில் இல் இருந்து இலங்கையில் தீவிரமாக பரவிவருகிறது.

தென்னை மட்டுமல்லாது கொய்யா, மா, நாவல், வாழை, வெண்டி, எலுமிச்சை, செம்பருத்தி, சீத்தாப்பழம், கருவேப்பிலை போன்றவற்றையும் இவை தாக்குகின்றன

வெள்ளை ஈ தாக்கத்தின் அறிகுறிகள்

இவற்றின் முட்டைகள் சுருள் வடிவத்தில் இலையின் அடிப்பாகத்தில் காணப்படும். இதன் குஞ்சுகளும், முதிர்ந்த ஈக்களும் ஓலையின் அடியிலிருந்து சாற்றை உறிஞ்சுகின்றன. இவை வெளியேற்றும் தேன் போன்ற திரவக்கழிவுகள் கீழ்மட்ட அடுக்கில் உள்ள ஓலைகளின் மேற்பரப்பில் பரவுகின்றன. அதனால் ஓலைகளின் மேல் கருப்பு நிறமுள்ள பூஞ்சணம் படர்கிறது.

அதிகளவு வெப்பம் மற்றும் குறைந்த காற்றின் ஈரப்பதம் ஆகிய காரணங்களால் இவை அதிகளவு பெருகியிருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

மஞ்சள் நிறம் இந்தப் பூச்சிகளைக் கவரும் தன்மையுடையது. அதனால் தான் செவ்விளநீர் செய்கை அதிகமாக பாதிப்புக்குள்ளாகிறது.

**இவற்றின் வாழ்க்கை வட்டம்**

“பெண் ஈயைவிட, ஆண் ஈ அளவில் சிறியது. இதன் முன் இறக்கைகளில் கரும்புள்ளிகள் காணப்படும். வயது முதிர்ந்த பெண் ஈ மஞ்சள் நிற நீள்வட்ட முட்டைகளைச் சுருள் வடிவ அமைப்புகளில் ஓலைகளின் அடிப்பகுதியில் இடுகின்றன. முட்டைகள் ஒருவித மெழுகுப் பூச்சுடன் காணப்படும். அதிலிருந்து இளம்பூச்சிகள் வெளிவரும். இவை நான்கு பருவங்களைக் கடந்து, கூட்டுப்புழுப் பருவத்தை அடையும்.

அதற்குப் பிறகு முதிர்ந்த ஈக்களாக வெளிவரும். 20-30 நாட்களில் புழுப் பருவம் வளர்ச்சியடைந்து, கூட்டம் கூட்டமாகத் தென்னை ஓலையின் அடிப்பகுதியை அடையும். காற்றின் மூலம் அடித்துச் செல்லப்பட்டு, ஒரு மரத்தில் இருந்து அடுத்தடுத்த மரங்களுக்கும், அருகில் உள்ள தோட்டங்களுக்கும் பரவி பாதிப்பை ஏற்படுத்தும்.

இவற்றின் கட்டுப்பாட்டு முறைகள்

தொடர்பாக மேலதிக விளக்கங்களை நாம் தமிழ்நாடு வேளாண் பொறியாளர் திரு. பிரிட்டோராஜ் அவர்களிடமும், கொழும்பிலுள்ள எமது ஊளுது யுபசயையின் ஆலோசகர்களான விவசாய மற்றும் நுண்ணுயிரியல் விரிவுரையாளர் மற்றும் முனைவர் பட்டம் பெற்ற ஆய்வுக்கூட நிபுணர்களிடம் கீழ்வரும் ஆலோசனை களைப் பெற்றோம்.



**கட்டுப்படுத்தும் வழிகள்**

1. பொதுவாக களைகொல்லிகள் மிகையாகப் பயன்படுத்தப்பட்ட நிலங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக வரும். (களை கொல்லி விளைவால் தாவரம் சோர்வாக இருப்பதால்)

2.தரை வழியே சரியான நீர்ப்பாசனம் கொடுக்காத நிலங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக வரும்.

3.தரை வழியே போதுமான சத்துக்கள் கொடுக்காத நிலங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக வரும்.

4.நோய் எதிர்ப்புத்திறன் குறைவான மரங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக வரும்.

இதனால் தொடர்ந்த பராமரிப்பு மிகவும் அவசியம்.

மாதம் ஒருமுறை குறைந்தபட்சம் 50 மில்லி சூடோமோனஸ் நுண்ணுயிர் உரத்தை நீருடன் கலந்து மரத்தை சுற்றி ஊற்றவேண்டும். இதனை மாதம் ஒருமுறை செய்யும் போது மரத்தில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

சரியான காலத்தில் வழங்கும் இடுபொருட்கள் மூலம் போசணையை உறுதிசெய்யும்போது தென்னை மட்டைகள் வலுவாகி ஓலைகள் உறுதியாகி, வெள்ளை ஈயின் தாக்கத்தை, பரவலாக்கத்தை எதிர்க்கும் அளவிற்கு ஓலையின் தோல் பகுதி தயாராகிவிடும்.

வெள்ளை ஈயானது காற்றில் பறந்து வரும் ஒரு அமைப்பாகும். இதனை தடுக்கும் பல பொறிமுறைகள் கூறப்பட்டா லும், உண்மையில் ஒரு மரம் இதனை வீரியமாக எதிர்ப்பதற்கு தயாராக உள்ள சூழ்நிலையை உறுதிசெய்வதே முக்கியமான படிநிலையாகும்.

மரத்தில் போசணை தேவையை, ஜீவாமிர்தம் அல்லது மீன் அமிலம் மூலம் மரத்திற்கு கொடுக்கலாம்.

இவற்றை விடவும் சற்று நவீன முறையில் இயற்கை விவசாயம் செய்ப வர்கள் நுஆ கரைசலை மரத்திற்கு கொடுக்கலாம்.

மேற்கூறியவற்றை விவசாயியின் பொருளாதார வசதிக்கேற்ப வாரம் ஒருமுறை சரியான அட்டவணைப்படி கொடுக்கவும்.

இவற்றின் மூலம் வெள்ளை ஈ தாக்கத்தை வருமுன் காக்கலாம்.

அதற்கும் மீறி கட்டுப்படுத்த முடியா துள்ளது எனில் கடைசி முயற்சியாக நஞ்சற்ற வேர்ட்டிசீலியம் லக்கானி உயிர் உரத்தை 14 நாட்களுக்கு ஒருமுறை தொடர்ந்து பவர்ஸ்பிரேயர் மூலம் விசிறுவதன் மூலம் இவற்றை நன்கு கட்டுப்படுத்தலாம்.

மஞ்சள் ஒட்டுப்பொறிகளை ஒரு ஏக்கருக்கு குறைந்தது 10 என்ற எண் ணிக்கையில், 6 அடி உயரத்தில் தொங்க விட வேண்டும். மஞ்சள் நிறத்தால் கவரப்பட்டு வரும் பூச்சிகள் அட்டையில் ஒட்டிக்கொள்ளும். அதன் பிறகு துணியால் அதை துடைத்து விட்டு, மீண்டும் ஒட்டுப்பொறியில் எண்ணெய் தடவி வைக்க வேண்டும்.

மரத்தில் உள்ள பூச்சிகளின் வளர்ச்சியைத் தடுக்க, இலை மட்டைகளில் உள்ள ஓலைகளின் அடிப்புறத்தில் நன்கு படுமாறு தண்ணீர் விசிறித் தெளிக்கலாம்.

இவற்றின் இரை விழுங்கிகள் இந்த வளர்ந்த பூச்சிகளை நன்றாக கட்டுப்படுத் துவதால் தாக்கப்பட்ட தோட்டங்களில் ஏக்கருக்கு 1,000 என்ற எண்ணிக்கையில் விடுவதன் மூலம் வெள்ளை ஈக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவ்வகை வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும்போது "கொக்ஸினெலிட்" பொறி வண்டுகள், "என்கர்ஸியா" ஒட்டுண்ணிகள் ஆகிய இயற்கை எதிரிகள் தோப்புகளிலேயே இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். அவற்றைக் கொண்டும் வெள்ளை ஈக்களை அழிக்கலாம்.

ஒரு லீட்டர் தண்ணீரில் வேப்பெண்ணெய் 30 மில்லி எடுத்து ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்க வேண்டும்.

ஓலைகளில் படரும் கரும்பூஞ்சணத்தை நிவர்த்தி செய்ய 25 கிராம் கோதுமை மாவை (All purpose flour) ஒரு லீட்டர் தண்ணீரில் கலந்து, அல்லது அரிசிக்கஞ்சை

ஓலைகளின் மேல் நன்கு படுமாறு தெளிக்க வேண்டும். இப்படி செய்யும் போது வெள்ளை ஈக்களால் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கலாம் ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும் சில தமிழக இயற்கை விவசாய நண்பர்களுடனான கலந்துரையாடல்களில் கீழ்வரும் இயற்கை தீர்வுகளையும் பெற்றோம்.

தொடர்ந்து வறண்ட வெப்பநிலை நிலவுவதால் இந்த பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் கீழ்வரும் நஞ்சற்ற முறைகளைக் கடைபிடித்து வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தலாம்.

விளக்குப் பொறிகள் ஏக்கருக்கு 2 வீதம் 6 முதல் 11 மணி வரையிலும் ஒளிரசெய்ய வேண்டும்.

☛ வேப்பங்கொட்டைச் சாறு 5மூ , வேப்பெண்ணெய் 5 மில்லி தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

☛ நொச்சி இலைச்சாறு (50 கிராம்ஃ லீட்டர்)

☛ நித்திய கல்யாணி எனப்படும் பட்டிப்பூ இலைச் சாறு (50 கிராம் லிட்டர்)

☛ கடைசி முயற்சியாக வேர்ட்டிசீலியம் லக்கானி உயிர் உரம் ஒரு லீட்டர் நீருக்கு 30 மில்லி எனும் அளவில் கலந்து 14 நாட்கள் இடைவெளியில் தென்னோலைகளில் நன்கு விசிற இந்த நோய்த்தாக்கம் கட்டுக்குள் வரும்.

**மேலதிக விபரங்களுக்கு - CSJ A gri 076 225 0017**

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY


# உலகை ஏஐ மயமாக்கும் நிறுவனம்

**இன்றைய தேதியில் உலகின் மிக முக்கியமான நிறுவனமாக அடையாளப படுத்தப்படுவது கூகுளோ, ஆப்பிளோ, மைக்ரோசாஃப்டோ அல்ல. என்விடியா தான். 2019-ம் ஆண்டு என்விடியா நிறுவனத்தின் மதிப்பு 100 மில்லியன் டாலராக இருந்தது. இன்று அதன் மதிப்பு 2 டிரில்லியன் டாலரைத் தாண்டியுள்ளது..**




**முகம்மது ரியாஸ்**

உலகின் முதல் மைக்ரோபுராசசரை இன்டெல் நிறுவனம் 1971-ம் ஆண்டு உருவாக்கியது. சென்ற நூற்றாண்டின் உலகின் முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்று அது. ஏனென்றால், அதற்கு முன்பு வரை கணினி என்பது கனரக இயந்திரம் போல ஒரு முழு அறையை ஆக்கிரமித் திருக்கும்.

இன்டெலின் மைக்ரோபுராசசர் கண்டுபிடிப்புக்குப் பிறகு கணினியின் வடிவம் மாற ஆரம்பித்தது. கணினித் துறையில், இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க இன்டெல் நிறுவனத்தையே தற்போது ஒரு நிறுவனம் ஆட்டம் காண வைத்திருக்கிறது.

### என்விடியா (NVIDIA)

இன்றைய தேதியில் உலகின் மிக முக்கியமான நிறுவனமாக அடையாளப்படுத்தப்படுவது கூகுளோ, ஆப்பிளோ, மைக்ரோசாஃப்டோ அல்ல. என்விடியாதான். 2019-ம் ஆண்டு என்விடியா நிறுவனத்தின் மதிப்பு 100 பில்லியன் டொலராக இருந்தது. இன்று அதன் மதிப்பு 2 டிரில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது.

உலக அளவில் மைக்ரோசாஃப்ட், ஆப்பிள், சவூதி எண்ணெய் நிறுவனமான அராம்கோ ஆகிய மூன்று நிறுவனங்கள் தான் 2 டிரில்லியன் டொலருக்கு மேல் மதிப்பு கொண்ட நிறுவனங்களாக இருந்துவந்தன. இந்நிலையில், தற்போது இந்தப் பட்டியலில் என்விடியா நிறுவனமும் இணைந்துள்ளது.

ஐந்தே ஆண்டுகளில் அந்நிறுவனத்தின் மதிப்பு 20 மடங்கு உயர்ந்து இருக்கிறது. அதுவே இன்டெல் நிறுவனத்தின் சந்தை மதிப்பு 2019-ல் 230 பில்லியன் டொலராக இருந்த நிலையில், தற்போது 180 பில்லியன் டொலராக குறைந்துள்ளது.

### கணினியின் புதிய பரிணாமம்:

நாம் தற்போது நுழைந்திருக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பக் காலகட்டத்தில் இயந்திரக் கற்றல் என்றழைக்கப்படும் மிஷின் லேர்னிங்கும் ஆழ்கற்றல் என்றழைக்கப்படும் டீப் லேர்னிங்கும் மிக முக்கியமான கணினிச் செயல்பாடுகளாக உள்ளன.

சாட் ஜிபிடியை எடுத்துக் கொள்வோம். நாம் உள்ளீடு செய்வதை அலசி அதற்கேற்ற


என்விடியா சிஇஓ ஜென்சன் ஹுவாங்

தரவுகளை பகுத்தாய்ந்து நமக்கு கண நேரத்தில் பதில் வழங்குகிறது. எண்ணிலடங்காதரவுத் தொகுப்பிலிருந்து குறிப்பிட்டத் தரவைப் பகுத்தெடுத்து, தேவைக்கு ஏற்ப அதை ஒழுங்கு படுத்தித் தருவது என்பது மிகப் பெரிய கம்ப்யூட்டிங் செயல்பாடாகும். இத்தகைய இயந்திரக் கற்றல், ஆழ்கற்றல் செயல்பாடுகளை வழமையான மைக்ரோ புராசசர்களால் மேற்கொள்ளவது மிகவும் கடினமானது. அதிதிறன் கொண்ட ஜிபியூ (Graphics Processing Unit) அவசியம்.

இத்தகைய அதிதிறன் கொண்ட ஜிபியூ சிப்களைத்தான் என்விடியா நிறுவனம் உருவாக்குகிறது. இதன் வழியாகவே, இன்று என்விடியா உலகின் முக்கியமான நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

### ஜிபியூ ஜாம்பவான்:

ஜென்சன் ஹுவாங், கிறிஸ் மலாச்சோவ்ஸ்கி மற்றும் கர்டிஸ் ப்ரீம் ஆகிய மூவரும் மின் பொறியாளர்கள். ஜென்சன் ஹுவாங், இன்டெலின் போட்டி நிறுவனமான ஏஎம்டியில் சிபியூ வடிவமைப்பாளாராகவும், மற்ற இருவர் சன் மைக்ரோசிஸ்டம்ஸ் நிறுவனத்திலும் பணிபுரிந்து வந்தனர்.

இத்துறையில் ஆழ்ந்த அனுபவம் கொண்ட இம்மூவரும், சொந்தமாக நிறுவனம் தொடங்கி நடத்தத் திட்டமிட்டனர். அப்படியாக, 1993-ம் ஆண்டு அவர்கள் உருவாக்கிய நிறுவனம்தான் என்விடியா. வீடியோ கேம்களுக்கான கிராபிக்ஸ் கார்டுகளைத் தயாரிப்பதுதான் அவர்களது முதன்மையான இலக்கு.

இதனால், 3டி கிராபிக்ஸ்க்கான சிப்களில் அவர்கள் முழுக்கவனம் செலுத்த ஆரம்பித்தனர். அவர்களது கிராபிக்ஸ் கார்டுகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. படிப்படியாக, வீடியோ கேம் துறையில்




வலுவான இடத்தை என்விடியா பிடித்தது.

1990-களில் இன்டெல் நிறுவனம் சிபியூ சந்தையில் உச்சத்தில் இருந்தது. மைக்ரோசாஃப்ட்டும் இன்டெலும் இணைந்து ஒட்டுமொத்த கணினி துறையையே தங்கள் கட்டுக்குள் வைத்திருந்தன. ஆனால், என்விடியா நிறுவன மோஜிபியூ சார்ந்து மட்டுமே தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்தி புதிய புதிய உருவாக்கங்களை மேற்கொண்டு வந்தது.

குறிப்பாக, 2006-ம் ஆண்டு என்விடியா நிறுவனம் CUDA நிரல் தளத்தை வெளியிட்டது. இதன் அறிமுகத்துக்கு முன்பு வரையில் ஜிபியூ-வுக்கான நிரல் எழுதுவது என்பது மிக மிக கடினமான பணியாக இருந்தது.

CUDA நிரல்தளம் அறிமுகம் செய்யப்பட்ட பிறகு வாடிக்கையாளர்கள் தங்களின் தேவைக்கு ஏற்ப என்விடியா சிப்பின் செயல்திறனை மேம்படுத்த முடிந்தது. இது என்விடியாவின் ஜிபியூ பயன்பாட்டை கேமிங் தவிர்த்து பல தளங்களுக்கு எடுத்துச் செல்ல வழிவகுத்தது.

கூகுள் முதல் டெஸ்லா வரை: சிபியூ என்பது கணினியை இயக்கும் அடிப்படைப் பணியைச் செய்யக்கூடியது. சிபியூ வழியாகவே, மென்பொருள்கள் இயங்குகின்றன. ஜிபியூ என்பது கணினியில் மிகச் சிக்கலான கணக்கீடுகளை செய்யக்கூடிய அமைப்பு ஆகும். மிகச் சிக்கலான கணக்கீடுகளை சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து ஒரே சமயத்தில் அவற்றை கணக்கீடும் பணியை ஜிபியூ செய்யும்.

இதுவரையிலான நம்முடைய கணினி பயன்பாட்டுக்கு சிபியூ போதுமானதாக இருந்தது. ஆனால், தற்போதைய செயற்கை நுண்ணறிவு காலகட்டத்தில், கணினிச் செயல்பாட்டில் சிபியூ-வை விடவும் ஜிபியூவே பிரதானமானதாக உள்ளது. இந்நிலையில் என்விடியா சிப்களுக்கான முக்கியத்துவம் பல மடங்கு அதிகரித்துள்ளது. இன்று நாம் பரவலாக உச்சரிக்கும் ஏஐ, கிரிப்டோ, கிளவுட் கம்ப்யூட்டிங், மெட்டாவர்ஸ், சைபர் செக்யூரிட்டி உள்ளிட்ட கட்டமைப்புகளுக்கு என்விடியா நிறுவனத்தின் சிப்தான் அடிப்படையாக உள்ளது.

கூகுள், மெட்டா, மைக்ரோசாஃப்ட், அமேசான் தொடங்கி டெஸ்லா நிறுவனத்தின் தானியங்கி கார் வரையில் என்விடியா சிப்பே பயன்படுத்தப்படுகிறது. மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தொழில் நுட்ப செலவினத்தில் 40 சதவீதம் என்விடியா சிப்புக்காக செலவிடப்படுவதாக கூறப்படுகிறது.

சாட் ஜிபிடியை உருவாக்கிய ஓப்பன் ஏஐ நிறுவனம் பல ஆயிரக்கணக்கான என்விடியா சிப்களைப் பயன்படுத்துகிறது. தற்போது உலகமெங்கும் உள்ள 3,000-க்கும் மேற்பட்ட ஏஐ ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் என்விடியா சிப் மூலமே ஏஐ கட்டமைப்பை உருவாக்கி வருகின்றன.

தற்சமயம் உலகளாவிய ஏஐ சிப் விற்பனையில் என்விடியா 90 சதவீதம் பங்கு வகிக்கிறது. முதலீட்டாளர்கள் என்விடியாவின் வளர்ச்சி சாத்தியத்தை உணர்ந்து அந்நிறுவனத்தில் முதலீட்டை குவித்து வருகின்றனர். கடந்த ஓராண்டில் மட்டும் என்விடியா நிறுவனத்தின் பங்கு மதிப்பு 450 சதவீதம் அதிகரித்துள்ளது.

தற்போதைய சூழலில் என்விடியாவுக்கு சரிசமமான ஜிபியூ தயாரிப்பு நிறுவனம் சந்தையில் இல்லை. உலகின் முதல் மைக்ரோபுராசசரை உருவாக்கிய இன்டெல் நிறுவனமோ, என்விடியாவின் வளர்ச்சியைக் கண்டு திகைத்து நிற்கிறது.

### ஏஐ சிப் தயாரிப்பு

ஏஎம்டி நிறுவனம் களத்தில் இருந்தாலும், என்விடியாவை எதிர்கொள்ளும் அளவுக்கு போதுமான கட்டமைப்பைக் கொண்டிருக்கவில்லை. இதனால், என்விடியாவின் சிப்களுக்கு தேவை மிகப் பெரும் அளவில் அதிகரித்துள்ளது. சொல்லப்போனால், ஏஐ சிப் தயாரிப்பில் தன்னிகரற்ற இடத்தில் என்விடியா உள்ளது. இந்தச்சூழலில் தொழில்நுட்ப தலைவர்களில் முக்கியமானவராக உருவெடுத்திருக்கிறார் என்விடியாவின் சிஇஓ ஜென்சன் ஹுவாங்.

இப்போதுதான் நாம் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்ப யுகத்துக்குள் காலடி வைத்துள்ளோம். அதன் முழு பரிமாணத்தை வரும் ஆண்டுகளில்தான் நாம் பார்க்க உள்ளோம். கணினி யுகத்தை இன்டெல் முன்னகர்த்தியது போல, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப யுகத்தை முன் னகர்த்திச் செல்லும் எத்தனிப்பில் இருக்கிறது என்விடியா!



# தலைமைத்துவ ரகசியங்கள்

**தலைசிறந்த லீடர் யார் தெரியுமா? அவருடைய ரீம் அவரை வேண்டி விரும்பி பின்தொடர வேண்டும் என்று விரும்பும். இதற்கு லீடரானவர் அவருடைய குழுவில் இருக்கும் அனைவருடைய தேவைகளையும் சரிசமமாக மதிப்பவராக இருக்க வேண்டும்..**

**மைக்கேல் ஹீத்**



ஒரு நாட்டின் லீடர்கள் (தலைவர்கள்) சரியாக செயல்பட்டால்தான் அந்த நாடு மிகப் பெரிய முன்னேற்றத்தைக் காணும். அதே போல, ஒரு நிறுவனத்தின் தலைவர் சரியான லீடராக இருந்து செயல்பட்டால் மட்டுமே அந்த நிறுவனம் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் காணும்.

லீடர்கள் என்பவர்கள் யார், அவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்கிறது 'லீடர ஷிப் சீக்ரெட்ஸ்' (Leadership Secrets) என்கிற புத்தகம். லண்டனில் வசிக்கும் மைக்கேல் ஹீத் எழுதிய புத்தகம் இது.

"கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக, லீடர்ஷிப் குறித்து ஆயிரக்கணக்கான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன. லீடர் ஷிப் என்றால் என்ன, லீடர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள், என்ன மாதிரியான குணாதிசயங்களைக்கொண்டிருக்கின்றனர் என்பது போன்ற விஷயங்களே இந்த ஆய்வுகளின் மையப் புள்ளியாக இருந்தன.

ஆனால், இவற்றைச் சொல்லும் புத்தகம் அல்ல இது. லீடர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைகள், அவர்கள் கொண்டிருக்கும் திறமைகள், அவர்களிடம் இருக்கும் யுக்திகள் மற்றும் நுட்பங்கள் என்னென்ன என்பதைப் பற்றிக் கூறுவதுதான் இந்தப் புத்தகத்தின் நோக்கம்

ஒரு கார்ப்பரேட் பணியாளராக நான் பல காலமாக பல லீடர்களுடன் இயங்கி வந்தேன். பிறகு, ஒரு லீடர்ஷிப் கன்சல்டன்ட்டாகப் பல ஆண்டுகள் பல்வேறு லீடர்களுடன் செயல்பட்டு வந்தேன். இதில் சில கார்ப்பரேட் லீடர்களைத் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பது என் வாழ்நாள் பாக்கியம் என்று சொல்லும் அளவுக்கு இருந்தது.

நீங்கள் இப்போது ஒரு லீடராகவோ, எதிர்காலத்தில் ஒரு லீடராகும் எண்ணத்துடன் செயல்பட்டுக்கொண்டு இருந்தாலோ, நீங்கள் இந்தப் புத்தகத்தை அவசியம் படிக்க வேண்டும். உங்களை அனைவரின் நினைவில் நிற்கும் லீடராக உங்களை உருவாக்குவதே இந்தப் புத்தகத்தின் நோக்கம்" என்கிறார் இந்த நூலா சிரியர். ஏழு அத்தியாயங்களில் 50 லீடர்ஷிப் ரகசியங்களைத் தொகுத்து வழங்குகிறது இந்தப் புத்தகம்.

லீடர்கள் என்பவர்கள் யார், லீடருக்கும் மேனேஜருக்கும் உள்ள வித்தியாசங்கள் என்னென்ன என்பதைப் பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்கிறது இந்தப் புத்தகம். லீடர் என்பவர், எதிர்காலம் என்பது எப்படி இருக்கக்கூடும் என்பதைக் கணித்து அதை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தன் குழுவைத் தயார் செய்வார். வேலைகளை நிர்வகித்து மனிதர்களை வழிநடத்திச் செல்வதுதான் ஒரு லீடரின் கடமை.

இங்கே லீடர் என்றவுடன் மேனேஜர் என்று நீங்கள் புரிந்துகொள்ளக் கூடாது. ஏனென்றால், மேனேஜர்கள் விரிவாகத் திட்டமிடுகிறவர்கள் லீடர்கள், செல்லும் திசையை நிர்ணயிப்பவர்கள். மேனேஜர்கள், வேலையை வெற்றிகரமாக நடைபெறச் செய்வது எப்படி என்பதில் கருத்தாக இருப்பவர்கள் லீடர்கள், மாற்றத்தைக் கொண்டுவருபவர்கள். மேனேஜர்கள், நிலையானதன்மையை உருவாக்குபவர்கள், குறைந்த கால இலக்குகளை மனதில் கொண்டு செயல்படுபவர்கள் லீடர்கள் நீண்ட கால இலக்குகளை மனதில்கொண்டு செயல் படுபவர்கள்.

ஒரு சிறந்த முகாடையாளராகத் திகழ தலைவருடைய குணாதிசயத்தையும் ஒருவர் கொண்டிருக்க வேண்டியுள்ளது. ஒரு முகாடையாளராக நிலையான தன்மையை உருவாக்கி வேலையை நடத்திச்செல்ல வேண்டும். நடைமுறையில் பெரிய சிக்கல்கள் உருவாகி நிலையான தன்மைக்கு சவால்கள் உருவானால், ஒரு லீடராக உருவெடுத்து மாற்றத்தைக் கொண்டுவரும் பக்குவமும் இருக்க வேண்டும்" என்று 'லீடர்ஷிப்' பற்றிய பல உண்மைகளை எடுத்துச் சொல்லி புரிய வைக்கிறது இந்தப் புத்தகம்.

"தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை, ஒரு லீடரின் ஒட்டுமொத்த நடத்தை, அவர்கள் மதிக்கும் விஷயங்கள், அவர்களுடைய குணாதிசயங்கள் போன்றவை வெற்றியில் பெரும் பங்கு வகிக்கின்றன. ஏனென்றால், இவையே ஒரு லீடரின்கீழ் செயல்படும் குழுவினர்கள் லீடரிடம் எதிர்பார்க்கும் குணங்களான பலம் பொருந்திய தன்மை, கொள்கைப்பிடிப்புடன்கூடிய செயல்பாடு போன்றவற்றுக்கு அடித்தளமாக அமைகின்றன.

தலைவர்கள் கொண்டிருக்கும் தைரியம், பொறுமை, இரும்பு போன்ற மன உறுதி, ஆர்வம் மற்றும் உற்சாகம் போன்றவையே ஈடுபடும் விஷயங்களில் மாற்றத்தைக் கொண்டு வர மிகவும் உதவியாக இருக்கும் குணாதிசயங்கள் ஆகும். இந்தவித குணாதிசயங்களைக் கொண்டிராத ஒரு லீடர் முதுகெலும்பில்லாத லீடரே ஆவார். உதாரணமாக, லீடர்களைப் பொறுத்தவரை, அவர் ஈடுபடும் ஒரு விஷயத்தில் மாற்று செயல்பாட்டுக்கு (யுடவநசயெவந நயலள) வழியே இல்லாத ஒரு சூழலில் அவர் அந்த வழியில் பயணித்து எக்கச்சக்கமான காரியங் களைச் செய்வார்.

அதே சமயம், அந்தக் காரியத்தை முடிக்க பல வழிகள் இருக்கும் சூழ்நிலையில் அவரிடம் இருக்கும் தைரியமே ஏதாவது ஒரு வழியைத் தேர்ந்தெடுத்து, அந்த வழியில் சென்று அந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க முயற்சி செய்ய உதவுகிறது. இங்கே தைரியம் என்பது எதைக் கண்டும் பயப்படாத நிலையை குறிப்பிடுவதில்லை. பயத்தை வெல்வதையே குறிப்பிடுகிறது. கொண்ட

கொள்கையைக் கடைப்பிடித்து காரியங்களைச் செயல்படுத்த தேவையான தார்மீக தைரியம் (Moral courage) ஒரு லீடருக்கு அவசியமான குணாதிசயம் ஆகும். இந்தத் தைரியமே ஒரு லீடரின் செயல் பாட்டை அவருடன் இருக்கும் குழுவினர்கள் உத்வேகத்துடன் பார்ப்பதற்கு உதவியாக இருக்கும். இதனாலேயே சிறந்த லீடர்கள் அவர்கள் மதிக்கும் விஷயங்களை அவர்களுடன் பணிபுரிந்தவர்களின் மனதில் நீங்காது இருக்குமாறு விட்டுச் செல்கின்றனர்.

ஒரு லீடரானவர் ஈடுபடும் எந்த ஒரு காரியத் திலும் அவருக்குப் பிடிக்கும் விஷயத்தைச் செய்யாமல், எது தேவையோ, அதைச் செய்ய முனையும் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால், பல விஷயங்களில் செய்ய வேண்டிய விஷயங்கள் கடினமான தாகவும் லீடருக்குப் பிடிக்காததாகவும் இருக்கும். இந்தச் சூழ்நிலையில், கட்டுப்பாடு மட்டுமே அவரை சரியான பாதையில் செல்ல வைக்கும். இதையே லீடருக்கான சுயகட்டுப்பாடு என்கிறோம். இந்த சுயகட்டுப்பாடே ஒரு லீடரை அவர் செய்ய நினைப்பதை (இலகுவான மற்றும் பிடித்த ஒன்றை) செய்யவிடாமல் கடினமானதாகவே இருந்தாலும், எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வைக்கும்.

ஒரு லீடர் அவரை சுற்றியிருப்பவர்களுக்கு நம்பிக்கை அளிப்பவராக இருக்க வேண்டும். அது எப்படி..? அடுத்தவர்களுக்கு நம்பிக்கை அளிப்பவராகத் தோன்றுவது சாத்தியமா என்று நீங்கள் கேட்கலாம். சாத்தியமே. பெரும்பாலான சமயங்களில் லீடர்கள் உறுதி அற்ற பல சூழ்நிலைகளையே எதிர்கொள்வார் கள். வெற்றிகரமாக அந்தச் சூழலைக் கடந்து செல்ல முடியுமா என்கிற கேள்வி அவர்கள் மனதிலும் இருக்கவே செய்யும். ஆனாலும், பயத்தை வெளியே காட்டாமல் நம்பிக்கையுடன் செயல்படுவதே ஒரு நல்ல லீடருக்கு அழகு. எல்லாம் நன்றாக நடக்கும் என்ற எண்ணத்துடன் முழுமனதாகச் செயல்பட வேண்டும்.

மனிதர்களின் உடலுக்கும் மனதுக்கும் ஓர் இணைப்பானது இருக்கிறது. நம்முடைய மனது நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்று நினைத்தால், உடல் மொழியும் நம்பிக்கை கொண்டிருப்பதைப்போல் காட்டும். இதுவே நம்மை நிஜமாகவே நம்பிக்கையுடன் இருப்பதைப்போல் காட்ட உதவும் முதல்படி ஆகும்.

அதே போல, எதிரே இருப்பவரை நேருக்கு நேர் (கண்ணை சந்தித்து) பார்த்துப் பேச வேண்டும். மேற்கத்திய கலாசாரத்தில் கண்ணைப் பார்த்து பேசாதவர்களைப் பணிந்து போகும் நபர்களாகவே நினைக்கின்றனர். இந்த குணாதிசயம் (கண்ணுக்கு கண் பார்த்து பேசாத) நமக்குள்ளே இருக்கும் எதிரி ஆகும். நமக்குள்ளே இருக்கும் எதிரியை நாம் முதலில் வெல்ல வேண்டும். அப்படி வென்று விட்டால் வெளியே இருக்கும் எதிரிகளை சுலபமாக வெல்ல முடியும்.

பேசும்போது நம்முடைய கைகள் இருக்கும் பொசிஷன், நாம் அணிந்திருக்கும் உடைகள், ஒரு விஷயத்தைப் பற்றி நாம் கூறும் கருத்து, குழப்பமான மனநிலையில் இருக்கிறோம் என்பதை வெளிக்காட்டுதலைத் தவிர்த்தல், எளிதில் வீழ்த்திவிட வாய்ப்பு இருக்கிறது என்பதை வெளிக்காட்டும் தோற்றத்தைத் தவிர்த்தல் போன்றவையும் நல்ல லீடர்கள் கொண்டிருக்க வேண்டிய குணாதிசயங்கள்" என்கிறார் ஆசிரியர்.

"லீடர்களுக்கு மிக மிகத் தேவையான ஒரு குணாதிசயம், பொறுமை. பொறுமை இல்லாமல் அவசரகதியில் இருத்தல் என்பது, ஒருவர் அதிக சக்தியுடன் இருப்பதைப் போன்ற மாயத்தோற்றத்தை வேண்டுமானாலும் தரலாம். ஆனால், நீண்ட நாள் அடிப்படையில் அது பெரிய அளவிலான பலன்களை அளிக்காது. குறிப்பாகச் சொன்னால், பொறுமையின்மை என்பது தவறான புரிதலுக்கும், மீண்டும் மீண்டும் ஒரு வேலையை செய்வதற்கும், தவறுகளைச் செய்துவிட்டு, அதை சரிசெய்ய வழிவகை செய்வதாகவும் இருக்கும்.



பொறுமையின்மையால் உருவான பிரச்னையை சரிசெய்ய அதிக பொறுமை வேண்டும் என்பதுதான் ஒரு நகைமுரணான விஷயம். உதாரணமாக, உங்களுடைய குழு எதிர்பார்த்த ரிசல்ட்டைக் கொண்டு வரவில்லை எனில், அது குறித்து பொறுமையாகக் கேள்வி கேட்கலாமே தவிர, உணர்ச்சிவசப்பட்டு, கொதித்துப் பேசி காரியத்தைக் கெடுத்துவிடக் கூடாது.

மனக்கசப்பு வர வாய்ப்புள்ள மோதல்களைத் தவிர்த்து எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்பட உதவும் வகையிலான விவாதங்களையே ஒரு லீடர் ஊக்குவிக்க வேண்டும். காலம் என்பது மனிதர்களின் நண்பனே தவிர, எதிரியில்லை. எனவே, பொறுமையாக இருந்து காலம் கனிவது வரை காத்திருப்பது நற்பலன் களையே தரும் என்பதை லீடர்கள் முழுமையாக உணர்ந்து செயல்பட வேண்டும். அதிலும் அரசியல் என்பது இல்லாத அலுவலகமே இல்லை. பொறுமையே அரசியல்களைக் கடந்து நீண்ட நாள் குறிக்கோள் களை நோக்கிப் பயணம் செய்ய உதவியாக இருக்கும்.

ஒரு லீடராக அவர் களுடைய குழு எங்கே செல்ல வேண்டும் என்பதைத் தீர்மானித்துச் சொல்வதும், அங்கே செல்வதால் என்ன பலன் கிடைக்கும் என்பதைக் குழுவினரை உணரவைப்பதுமே உங்களுடைய தலையாய கடமையாகும். போகும் இடத்தைச் சென்றடைய குழுவினர் தற்போது செய்யும் செயல்களில் எவற்றை எல்லாம் தவிர்க்கவும்ஃ மாற்றவும் வேண்டும் என்பதை அவர்களை உணர வைப்பது லீடருடைய கடமையாகும்.

மாறுவதற்கு தயங்குவது மனித இயல்பு. எனவே, குழுவினரிடம் எந்தளவுக்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதை முழுமையாக வெளிக் கொணர்ந்து அவர்களுக்கு மாற்றத்தின் அவசியத்தை உணர்த்துவதும் லீடர்களுடைய கடமையே ஆகும்.

லீடர்ஷிப் குறித்த முக்கியமான பல விஷயங் களை பல்வேறு நிஜவாழ்க்கை உதாரணங் களுடன் விளக்கும் இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
**2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!**

*இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்





4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2024இல் வெளியிடப்பெற்றது.